உ

குமரா முருகா குக ஓம் சரணம்



ஈப்போ அருணகிரிநாதர் மன்றம்



அருணகிரிநாதர் விழா 2013


சிறப்பு மலர்

1-1-2013

அருள்மிகு தண்டாயுதபாணி ஆலய மண்டபம்

(செட்டியார் கோவில்), ஈப்போ






அருள்மிகு தண்டாயுதபாணி
(மூலவர்)
ஈப்போ, மலேசியா

மலேயாவில் ஈப்போ வளம்சேர் நகரில்
கலைவடிவாய்க் காட்சிதரும் கந்தன் - நிலையாய்
அருணகிரி பாட அருள்வழங்கும் எந்தை
கருணைக் கழலடியே காப்பு!

- பொற்கிழிக் கவிஞர் சொ. சொ. மீ



அருள்மிகு தண்டாயுதபாணி
(உற்சவர்)

மலையெல்லாம் வாழும் வளர்தண்ட பாணி
மலைநாட்டை வாழ்விக்க வந்தான் - நிலையாக
எப்போவில் காட்சிதரும் ஈசன் நமக்கென்று
காப்பாய் இருப்பான் கனிந்து!

- பொற்கிழிக் கவிஞர் சொ. சொ. மீ

ஈப்போ அருணகிரிநாதர் விழா

நிர்வாக உறுப்பினர்கள்





2013-ம் ஆண்டு அருணகிரிநாதர் விழா சிறப்புடன்
நடைபெற எங்களின் நல்வாழ்த்துகள் !



நற்பணிச் செம்மல், கலாக்காவலர்
டத்தோ லே. தமிழ்செல்வன்
குடும்பத்தினர்

முருகா சரணம்







பாலயோகி சுவாமிகள் (ஸ்தாபகர் - அதிபர்) திருமுருகன் திருவாக்கு திருபீடம்

கலியுக ருகககூ நந்தன வருடம் கார்த்திகை 28ஆம் நாள் (ஆங்கிலம் 13.12.2012)

ஆடும் பரிவேல் அணிசே வல்எனப் பாடும் பணியே பணியாய் அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில் சாடும் தனியானை சகோதரனே (கந்தர் அனுபூதி)

முருகப் பெருமானை வழிபடும் பக்தப் பெருமக்கள் என்றும் மறவாது போற்றும் அடியார்ப் பெருமக்களில் உயர் ஞானப் பெருந்தகையர் , சந்தமாமுனிவர்அருணகிரிநாதப் பெருமான் ஆவார்.

" சும்மா இரு சொல்லற " எனும் மெய்ஞ்ஞான உபதேசத்தை இளைய சிவனாரான முருகப் பெருமானிடம் பெற்று, மந்திர - அருள் சாகச - யந்திர பரிபூரண அருள் அமுத வாக்கியங்களை திருப்புகழாக கந்தனின் அரும்புகழைப் பாடியருளிய பெருமான்.

திருப்புகழில் , திருத்தல வரலாறுகள் - இராமாயண , மகாபாரத சம்பவங்கள் , வேத , ஆகம நன்னெறிகள் ,சங்கத் தமிழின் இனிய பதிவுகள் என பல்வகைச் சுவையும் இணைத்து உபதேச மந்திரமாக அருள்கிறார் அருணைமாமுனிவர்.

தேவராய சுவாமிகள் - பாம்பன் சுவாமிகள் - திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் , வள்ளிமலை சுவாமிகள் என நீண்ட வரிசையாக அலங்கரிக்கும் முருகனடியார்கள் பலரும் அருணகிரிநாதப் பெருமானின் , திருப்புகழ் – கந்தர் அந்தாதி – கந்தர் அலங்காரம் – கந்தர் அனுபூதி – வேல் – மயில் – சேவல் விருத்தங்கள் என பன்னூல் பிரவாகரத்தில் மூழ்கி பேரருள் உற்றனர்.

இந்த வரிசையை மேலும் தொடரவேண்டும் எனும் அருள் அவாவில் தங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டு , நமது திருநாட்டின் ஈப்போஅருணகிரிநாதர் மன்றம் நான்காவது ஆண்டாக " அருணகிரிநாதர் விழா " நடத்துவது அருமைக்கும் பெருமைக்கும் உரியதாகும் . இந்த அருள் விழாவினை முன்னின்று நடத்தும் டாக்டர் ஜெயபாலன் வள்ளியப்பன் மற்றும் அவர்தம் திருக்குழுவினருக்கும் ,கலந்துக் கொள்வோருக்கும் எந்தை பிரபுவான முருகப் பெருமானின் பேரருள் அமையப் போற்றுகிறோம்.

ஓம் முருகா சரணம்

BALAYOGI SWAMIGAL
THIRUMURUGAN THIRUVAKKU THIRUPEEDAM
15, JALAN 1/6, SECTION ONE, OLD TOWN, 46000 PETALING JAYA, SELANGOR, MALAYSIA
TEL : +6 016 689 0615 EMAIL : thirupeedam@hotmail.com
WEB : www.thirupeedam.org



ஈப்போ அருணகிரிநாதர் மன்றத் தலைவர் டாக்டர் வ. ஜெயபாலன் அவர்களின் செய்தி

"காப்பான்	தமிழைக்	கருணைத்	தமிழின்	கலைஞானி
கோப்பான்	செல்வச்	செழுமைத்	தொழிலைத்	தினம்பேணி
ஊர்ப்பா	லூட்டும்	ஊறும்	அருளில்	உயர்கேணி
ஈப்போ	நகரத்	திருக்கும்	தண்டா	யுதபாணி"

கவியரசு கண்ணதாசன்

அன்புடையீர் வணக்கம்,

ஆங்கில வருடம் முதல் தேதி என்றால், ஈப்போ வாழ் தமிழர்கள், முருக பக்தர்கள் ஆவலுடன் அருணகிரிநாதர் விழாவை எதிர்பார்க்க வைக்கும் முயற்சியில் ஓரளவு வெற்றி பெற்று விட்டோம் என்பதை உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் பெருமிதம் கொள்கிறோம்.

அருணகிரிநாதர் விழா என்பது அருணை முனிவருக்காக மட்டும் எடுக்கப் படும் விழா அல்ல. இது முருக பக்தி விழா, சன்மார்க்கக் கொள்கை விழா. இது இயல், இசை நாட்டியத்துடன் சேர்ந்த முத்தமிழ் விழா. பக்தி இலக்கிய விழா. பல நல்லுள்ளங்கள் ஒன்று சேரும் ஆன்மீக விழா. அதுவே நம்முடைய அருணகிரிநாதர் விழா என்ற பெயரில் இன்று மலருகிறது.

இவ்விழாவை ஒவ்வொரு வருடமும் மென்மேலும் மெருகேற நடத்தும் பெருமை நம்முடைய சிறந்த தன்னலமறியாத நிர்வாகக் குழுவினரையே சாரும். மேலும், விழாவிற்கு வற்றாத ஆதரவை வருடந்தோறும் வழங்கி வரும் டத்தோ லெ. தமிழ்ச்செல்வம், மாண்புமிகு குலசேகரன், மாண்பமை டத்தோ சு. வீரசிங்கம், திரு. சிங்கராம் (சிங்காரம் ஸ்டோர்ஸ்), திரு. இளங்கோ போன்ற நல்லுள்ளங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றி மலர்கள்.

இவ்வருட சிறப்பு மலர், சிறப்பானதொரு மலராக மலர்வதற்கு பாடுபட்ட கவிஞர் வே. மகேந்திரன் அவர்களுக்கும், இதை அழகாக அச்சிட்டு நம் கைகளில் தவழவிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நல்லரசன் பதிப்பக உரிமையாளர் திரு. இரா. தமிழரசன் அவரது உதவியாளர் திருமதி ச. இராஜேஸ்வரி, ஆலோசனைகள் வழங்கிய சித்தியவான் மா. திருநாவுக்கரசு மற்றும் விழா சிறக்கப் பாடுபட்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எம்பெருமான் முருகனின் கழல் பணிந்து, உளம் நெகிழ்ந்து என் நன்றியைத் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

குறைந்தது நாளொரு திருப்புகழும், வாரமொருமுறை கந்தரலங்காரம், கந்தரனுபூதி, வேல்-மயில் சேவல் விருத்தம், திருவகுப்பு போன்றவற்றைப் படியுங்கள். அருணகிரிநாதரின் ஆசியோடு, முருகப் பெருமானின் அருளைப் பெறுங்கள். இதுவே அருணகிரிநாதர் மன்றத்தின் குறிக்கோள்.

'குமரா, முருகா, குக ஓம் சரணம்"

அன்புடன்
டாக்டர் வ. ஜெயபாலன்

35/3



பேரா மாநில முதல்வரின் சிறப்பு ஆலோசகர் மதிப்புமிகு சு. வீரசிங்கம் அவர்களின் வாழ்த்துரை

தொன்று தொட்டு தமிழ் நாட்டு மக்கள் போற்றி வணங்கி வரும் சங்கப் பாடல்களிலும் சிறப்பித்துப் பாடப் பெற்றிருப்பதோடு நக்கீரர், ஔவையார் போன்ற பெரும் புலவர்களாலும் இன்னும் பலராலும் பாடப்பெற்றும் வணங்கப் பெற்றும் வரும் தமிழ்க் கடவுளாகிய திருமுருகப் பெருமானின் திருவருள் பெற்றுக் கடல்மடை திறந்தது போல் முருகன்பால் ஆயிரத்துக்கு மேற்பட்ட திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி, முருகனை வண்ணக் கவிகளால் அழகு செய்தும், இதுவரை யாரும் பாடாத வகையில் புதிய புதிய சந்தங்களில், தமிழுக்கும் ஒரு புதிய ஓசை நயத்தைத் தந்து, பாடுவோர்க்கு துள்ளலும், துடிப்பும், பக்தி உணர்வையும் ஊட்டுகின்ற வகையிலும், கேட்கும் செவிகளுக்கெல்லாம் தழின்பத்தையும் முருகப்பெருமான் பக்திப் பிரவாகத்தையும் துய்க்கத்தக்க அருட்கவிகளைப் பொழிந்தவர்தான் அருணகிரிப்பெருமான் என்னும் குரு மகா முனிவர் ஆவார்.

அவர்கள் கந்தலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி, திருக்காப்பு, மயில் விருத்தம் போன்ற மிகச் சிறந்த அருள்ஞானப் படைப்புகளையும் தந்த முனிவர் பெருமானுக்கு மலேசியாவின் ஈப்போவில் அருணகிரிநாதர் மன்றம் அவர் புகழையும் தமிழின் பெருமையையும் திருமுருகனின் திருவருளையும் பரப்பும் உயர்ந்த நோக்கோடு ஆண்டுத்தோறும் பக்தி சிறந்த முத்தமிழ் விழாவாக நடத்தி வந்தார்கள். இவ்வாண்டும் நான்காம் விழாவாக மிகச்சிறந்த நிகழ்ச்சிகளுடனும் நடத்தவிருப்பது கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். விழா வெற்றி பெற திருமுருகன் திருவருளை வேண்டி அன்புடன் வாழ்த்துகிறேன்.

டத்தோ சு. வீரசிங்கம்



ஈப்போ நாடாளுமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. குலசேகரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஈப்போவில் அருணகிரிநாதர் மன்றம் ஆண்டுதோறும் ஜனவரி 1-ம் தேதி ஆருணகிரிநாதருக்கு அருள்கனிய சிறப்பான முறையில் முத்தமிழ் விழாவாக நடத்தி வருவதும் கடந்த மூன்றாண்டுகளாக நடத்தியது போல் நான்காவது ஆண்டாக இவ்வாண்டும் சிறப்பாக நடைபெறுவதற்கும் சென்ற ஆண்டுகளைப் போல் சிறப்பான மலர் ஒன்று வெளியிடுவதையும் அறிந்து பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பதினாறாயிரம் பாடல்கள் கொண்ட திருப்புகழில், இன்று நமக்கு கிடைத்திருப்பது ஆயிரத்து முன்னூறு பாடல்கள் மட்டுமே. இதையாவது நாம் அடுத்த சந்ததியருக்குச் சிதைவில்லாமல் சேர்க்க வேண்டும். இதற்கு, அருணகிரிநாதர் விழாப் போன்ற ஆன்மீக நிகழ்வுகள் நிறைய நடைபெற வேண்டும். இதுபோன்ற விழாவிற்கு ஈப்போ பாராட் நாடாளுமன்றத்தின் ஆதரவு என்றென்றும் உண்டு.

இவ்விழாவின், மன்றத்தின் தலைவர் டாக்கடர் வ. ஜெயபாலன் அவர்களுக்கும், மன்ற, விழா, செயற்குழு உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதுடன் இவ்விழா எல்லா வகையிலும் சிறப்பாக வெற்றி பெறவும் வாழ்த்துகிறேன்.

திருமுருகன் அருள் எல்லாரும் பெற்று வாழ்க

அன்புடன்
மு. குலசேகரன்



அருள்மிகு தண்டாயுதபாணி ஆலயம் (நகரத்தார் கோவில்) நடப்புக் காரியக்காரர் திரு. மு. காளைராஜன் செட்டியார் அவர்களின் வாழ்த்துச் செய்தி

முருகப்பன் இல்லாத ஊருமில்லை - ஒரு
முத்தையன் இல்லாத வீடுமில்லை
பழனியப்பன் இன்றி வம்சமில்லை - எங்கள்
பரம்பரைக்கு அவனின்றி அம்சமில்லை

அன்புடையீர்,
ஆங்கில வருடம் முதல் தேதி என்றால் நமது ஆலயத்தில் அருணகிரிநாதர் விழா என்று எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்க்கும் வகையில் மிகச் சிறப்பாக இந்த ஆன்மீகத் திருவிழா ஆண்டுதோறும் நடைபெறுவது மகிழ்ச்சியளிக்கிறது.

தமிழ்க் கடவுளாம் கந்தக் கடவுளை, சொந்தக்கடவுளாகப் போற்றிப் புகழ்ந்து வழிபடுபவர்கள் நகரத்தார் பெருமக்கள். முருகனே தம்மை பாடுமாறு அருணை முனிவருக்கு அடியெடுத்து கொடுத்துப் பாடிய நூல் திருப்புகழ். முருகக் கடவுளை வழிபடு தெய்வமாகக் கொண்டவர்களுக்கு வேதம் போன்றது அருணகிரிநாதர் பாடல்கள்.

இந்த முருகனின் வேதத்தை, ஈப்போ மாநகரில் பரப்புவதையே முழுமுச்சாகக் கொண்ட ஈப்போ அருணகிரிநாதர் மன்றத்தினருக்கு நமது மனமார்ந்த வாழ்த்துக்கள். மன்றத்தினரின் அனைத்து சீரிய சேவைகளிலும் ஆலயத்தினரின் ஆதரவு என்றென்றும் இருக்கும் என்பதையும் இந்த வேளையில் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நடைபெறவிருக்கும் அருணகிரிநாதர் விழா 2013 எல்லா வகையிலும் சிறப்புடன் நடக்க எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதோடு இந்த அரிய பணியை மகப்பேறு நிபுணர் டாக்டர் ஜெயபாலன் வள்ளியப்பன் தலைமையில் ஏற்பாடு செய்து வரும் ஏற்பாட்டுக்குழுவினருக்கு கோவில் நிர்வாகத்தின் சார்பில் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன்
மு. காளைராஜன் செட்டியார்



திருப்புகழ்போல் தழைத்து வாழ்க



அமுதகலை தருமதியம் அமைந்ததென
அழகுமுகம் ஆறு கொண்டான்
அவுணர்குலச் சலதியின்மேல் அயில்விடும்நல்
அழகுமயில் உகந்த கந்தன்
அன்றுதிரு முருகாற்றுப் படைஉரைத்த
நக்கீரற்கு அருளினானை
ஆனபல தாளவகை அமைந்தகவி
என்றதிருப் புகழி னாலே



குமுகுமுவென் றுலகிடையில் கொடுத்தகவி
குமரனடி மறவாத் தேவர்
குலமகிழ உவந்தகரப் பெருமானைக்
குன்று தோறாடு வானைக்
கும்பிட்ட பெரியகிரி அருணகிரி
குடியிருந்த கோவிலூரில்
குளிரருவி கொட்டுகிரி தொட்டுவிளை
யாடுகிற சோதி கண்டே

இமகிரியன் ஒருபாதி இறைவிஉடன்
உவந்தன்று காட்சி நல்கி
எழிலான கார்த்திகைநாள் கண்டுவக்கம்
எயிலுடைய முருக வேளை
இனியகுலம் தானுயர வணங்குபவர்
இதயமெலாம் மகிழு வண்ணம்
இனியதிருப் புகழுரைத்த அருணகிரி
என்னுமொரு சந்த வேந்தன்



தமதுபுகழ் விளக்கவரும் ஆற்றலுடன்
தமிழாகித் தழைத்து வாழ்க
தண்டையணி வெட்சிபுனை தமிழ்க்கடவுள்
தண்ணருளால் தரணி போற்றத்
தனிப்பெரிய புகழ்கீர்த்தி தானமையத்
தண்மைமிகும் ஈப்போ தன்னில்
தான்வாழ மீனவன்யான் வாழ்த்துகிறேன்
திருப்புகழ்போல் தழைத்து வாழ்க



காப்பியக் கவிஞர் - கவிமாமணி - கவிஞர்கோ
நற்றமிழ் நாவலர் - நா.மீனவன், கண்டர மாணிக்கம், தமிழ்நாடு



செயலாளருடன் சில மணித்துளிகள்.....

தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமானுக்கு தித்திக்கும் திருப்புகழை தனது மெய்யன்போடு ஓதிய அருணகிரிநாதருக்கு “ஈப்போ அருணகிரிநாதர் மன்றம்” எடுக்கும் விழா இவ்வாண்டோடு நான்காம் ஆண்டாக நடைபெறுகின்றது.

முருக போற்றி தழைக்க நாங்கள் எடுக்கும் முயற்சிக்கு முருக அன்பர்கள் வழங்கும் ஆதரவு எங்களை மென்மேலும் சமயத் தொண்டோடு, தமிழ்த் தொண்டும் செய்வதற்கு எங்களை ஆற்றுப் படுத்துகின்றது.

இவ்வாண்டு விழா சிறக்க உற்று உதவிய மெய்யன்பர்கள் அனைவரும் போற்றதலுக்குறியவர்.

இவ்விழாவில் பங்காற்றிய அனைத்து கலைஞர்களுக்கும், பொற்கிழிக் கவிஞர் பேராசிரியர் முனைவர் சொ. சொ. மீ. சுந்தரம், செந்தமிழ்ச் செல்வர் சித. இராமசாமி, முனைவர் அனந்தராமன், திருமதி இராசம் அனந்தராமன் இவர்களுக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றி.

நன்றி.

“கடம்ப மலர் நெடுவேள்
என்னை அருளி அருள் முருக சூள்சூளின்
முருக உறழப் பகைத் தலைச்சென்று
அரும் பெறல் மரபின் பெரும்பெயர் முருக”

அன்புடன்
இரா. தமிழரசன்



அருணகிரிநாதர் நான்காம் ஆண்டு விழா மலர்க்குழுப் பொறுப்பாளர் கவிஞர் வே. மகேந்திரன் அவர்களின் செய்தி

எல்லாம் வல்ல எழில் முருகன் திருவருளால் அவனது அன்பால் அவன் கட்டளையால் அவனது புகழைத் திருப்புகழ் என்னும் தலைப்பமைந்த பாடல்களை மற்றும் பலதலைப்புகளிலும் பாடி அருள் ஊட்டலிலும், தமிழ் ஊட்டலிலும் வியக்கத்தக்க புதுமையைக் கையாண்ட அருள்ஞானியார் திரு அருணகிரிநாதருக்கு அவர்பெயரால் மன்றம் அமைத்து ஈப்போவில் அவருக்கு கடந்த மூன்றாண்டுகளாக நாடுபோற்ற நல்லோர் போற்ற அருள்விழாவாக ஆன்ற தமிழ்விழாவாக, இசைவிழாவாகச் சிறந்த முறையில் நடத்தி, திருமுருகன் அருளையும், அருணகிரிநாதர் புகழையும், தமிழ்ச்செல்வத்தின் அருமையையும் பெருமையையும் பரப்பி வரும் அருணகிரிநாதர் மன்றம் இவ்வாண்டு நான்காம் ஆண்டாகத் தொடர்ந்து கொண்டாடவும் சென்ற ஆண்டுகளைப் போல் சிறப்பான செய்திகளைத் தாங்கிய அருள்மலராகவும் கட்டுரை, கவிதைகள், தாங்கிய அழகிய முத்தமிழ் மலராகவும் பிழைகளே இல்லாமல் வெளியிட வேண்டுமென்ற ஆர்வத்தோடும், உறுதியோடும் இந்த மலரை வெளியிட என்னைப் பொறுப்பேற்றுச் செயல்படும்படி அருணகிரிநாதர் மன்றத் தலைவர் எனது மதிப்பிற்குரிய கவிஞர், டாக்டர் ஜெயபாலன் வள்ளியப்பன் அவர்கள் அன்புடன் கேட்டுக் கொண்டதற்கிணங்க இப்பொறுப்பினை ஏற்றுச் செயல்பட்டேன். டாக்டர் அவர்களும் துணையாக இருந்து பிழைத்திருத்தம் போன்ற உதவிகளைச் செய்துள்ளார்.

சிறந்த கட்டுரை கவிதைகளை வழங்கியுள்ள பேராசிரியர்கள், பெரியவர்கள், கவிஞர்கள் மற்றும் விளம்பரங்கள் தந்துதவிய வாணிகப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்வதுடன், வாழ்த்துரைகள் வழங்கிய பெரியவர்களுக்கும், மலருக்கு விளம்பரங்கள் சேகரித்து கொடுத்துதவிய திரு. சரவணன், திரு. இரா. தமிழரசன், திரு. சம்பந்தம் செட்டியார், திரு. சாத்தப்பன் அவர்களுக்கும் நன்றி. சிறப்பாக அழகிய முறையில் இம்மலரை அச்சிட்டு, குறித்த காலத்தில் உதவிய திருமதி இராஜேஸ்வரிக்கும். நல்லரசன் அச்சக உரிமையாளர் திரு. இரா. தமிழரசன் அவர்களுக்கும் மிக்க நன்றி.

எல்லோர்க்கும் திருமுருகன் என்றென்றும் அருள் நல்க!

நன்றியுடன்

வே. மகேந்திரன்



செங்கோட்டு வேலன் சிறப்பு

(சொ. சொ. மீ. சுந்தரம், மதுரை)

அருணகிரிநாதர் பாடிய முருகன் திருத்தலங்களில் தனிச்சிறப்புப் பெற்ற தலம் திருச்செங்கோடு. கொங்கு நாட்டில் சேலத்துக்கும் ஈரோட்டுக்கும் இடையில் உள்ள இத்தலத்தைச் சர்ப்பசயிலம் என்றும் நாககிரி என்றும் கூறுவார்கள்.

"நாலுமறைப் பொருளோனே
நாககிரிப் பெருமாளே"

என்பது திருப்புகழ். ஒரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுதேவனுக்கும் ஒரு போட்டி ஏற்பட்டது. ஆயிரம் தலைகளை உடைய ஆதிசேடன் மேரு மலையின் ஆயிரம் சிகரங்களையும் தன்னுடைய தலைகளினால் இறுகப் பற்றிக் கொண்டான். வாயுதேவன், ஆதிசேடனுடைய தலைகளில் ஒன்றையாவது அசைத்து விட வேண்டும் என்பது போட்டி. வாயுதேவன் சூறாவளிக் காற்றாக அடித்தான். மேருமலையின் ஒரு சிகரம் வேரோடு பறிக்கப்பட்ட மரத்தைப்போலப் பாம்புத்தலையோடு பறந்து வந்து இந்த இடத்தில் விழுந்ததால் இது பாம்புமலை என்று அழைக்கப்பெற்று வடமொழியில் சர்ப்பசயிலமாயிற்று. அருணகிரி இதை நாககிரி என்றழைத்தார்.

<u>தேவாரப் பாடல்பெற்ற திருத்தலம்</u>

தேவார காலத்தில் இத்தலம் திருச்செங்குன்றூர் என்று அழைக்கப் பெற்றது. திருஞானசம்பந்தர் 12-5-639-ல் அவதாரம் செய்து 28-5-655-ல் சிவஜோதியில் கலந்தார். அவர் அடியார்களுடன் இவ்வூருக்கு வந்தபொழுது இப்பகுதி முழுவதும் குளிர் காய்ச்சல் பரவியிருந்தது. திருஞானசம்பந்தர் சிவபெருமானை வணங்கிப் பதிகம் பாடினார்.

"வெந்தவெண் நீறணிந்து விரிநூல் திகழ் மார்பில் நல்ல
பந்தணவும் விரலாள் ஒரு பாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச் செங் குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே"
என்று அவர் பாடியதற் கேற்பத் துன்பம் அகன்று குளிர்சுரம் நீங்கியது.

<u>மாட்டுக்காரனின் பாட்டுத்திறமை</u>

திருச்செங்கோட்டில் ஒரு பக்தர் எல்லாம் முருகனே என்று வாழ்ந்து வந்தார்.

"பூமாலை வாடும். மணம் பொன்மாலைக்கு இல்லையென்று
பாமாலை வைத்து ஈசன் பாதம் பணிபவனோ?"

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடியதற்கேற்ப முருகனுக்குப் பாமாலை சூட்டிப் பரவி மகிழ்ந்தார். ஒருநாள் அரசனிடமிருந்து ஒரு கட்டளை வந்தது. "நாளைக்காலை நம் அவைக்கு வரும் வெளியூர்ப் புலவருடன் நீங்கள் போட்டி போட்டுக் கவிபாட வேண்டும்" என்ற கட்டளையைக் கண்டதும் இந்தப் புலவர் திடுக்கிட்டார். "அந்த வெளியூர்ப் புலவர் மிகப் பெரியவர். பல ஊர்களில் வெற்றிக்கொடி நாட்டியவர். நான் முருகனைப் பாடும் பக்தன். என்னால் அவருடன் எப்படிப் போட்டியிட்டுப் பாட முடியும். அவர் மலை. நான் மடு. அவர் இமயமலை. நான் திருச்செங்கோட்டு மலை. முருகன்தான் காப்பாற்ற வேண்டும்". என்று முருகன் திருவடிகளில் சரணடைந்தார். முருகன் பொறுப்பை ஏற்றுக் கொண்டான்.

அன்று மாலை அந்த வெளியூர்க் கவிஞர் திருச்செங்கோட்டுக்கு வருகிறார். மலையைப் பார்க்கிறார். இது என்ன மலை என்று கேட்டார். பக்கத்தில் நின்ற மாட்டுக்காரப் பையன், இது சர்ப்ப சயிலம் (பாம்புமலை) என்றான். உடனே அந்தப் புலவர் பாடத் தொடங்கினார். இந்தத் திருச்செங்கோட்டு மலை பாம்பு மலையானால் ஏன் படமெடுத்து ஆடவில்லை? படுத்துக்கிடக்கிறதே என்று வினா எழுப்பிப் பாடத் தொடங்கினார்.

சமர முகத்திருச் செங்கோடு சர்ப்ப சயிலமெனில்
அமரில் படம்விரித்து ஆடாத தென்னை?

என்று தொடங்கிய பாடல் அதற்குமேல் தொடராமல் நின்றுவிட்டது. வினாவெழுப்பி விடையும் கூறும் புலவர் வாக்குத் தடைப்பட்டு நின்று விட்டது. புலவர் தென்னை மரம் போல் நிற்கிறார். "பாட்டை முடிக்கத் தெரியாத எனக்குப் பல்லக்கு எதற்கு" என்று பல்லக்கை விட்டு இறங்கினார். பக்கத்திலிருந்த மாட்டுக்கார வேலன் "என்ன சாமி! பாட்டுப் பாதியில் நின்றுவிட்டதா? நான் மீதியையும் பாடி முடிக்கட்டுமா?" என்றான். புலவருக்கு அவமானமாகப் போய்விட்டது. இவனை விடவா நான் தாழ்ந்துவிட்டேன் என்று நினைத்தார். "சரி பாடு" என்றார். வேலன் வினாவுக்கு விடை தந்தான். மலையின் மேல் முருகனுடைய மயில் வாகனம் இருக்கிறது. அது கொத்துமென்று பயந்து பாம்பு படமெடுக்க வில்லை, என்று பாட்டை முடித்தான்.

அஃது ஆய்ந்திலையோ?
நமரன் குறவள்ளி பங்கன் எழுகரை நாட்டுயர்ந்த
குமரன் திருமுரு கன்மயில் வாகனம் கொத்துமென்றே

என்று இலக்கணம் பிழைபடாமல் கட்டளைக்கலித்துறைப் பாடல் முடிவுற்றது. புலவர் அயர்ந்து விட்டார். "நீ யாரப்பா! இவ்வளவு நன்றாகப் பாடுகிறாயே!" என்றார். "இந்த ஊரில் ஒரு புலவர் இருக்கிறார். மிக நன்றாக முருகனைப் பாடுவார். அவர்தான் என் ஆசிரியர். அவரிடம் சிலநாட்கள் தமிழ் படித்தேன். "போடா ஞான சூன்யம்" என்று சொல்லி என்னை விரட்டி விட்டார். மாடு மேய்த்துக் கொண்டிருக்கிறேன்." என்றான் அந்தப் பையன். மேலும் "அவரோடு போட்டி போட்டு பாட நாளை ஒரு வெளியூர்க் கவிஞர் வரப் போகிறாராம். பாவம் அவர் பாடு" என்றான். புலவருக்கு நன்றாகப் புரிந்து விட்டது. ஒரு ஓலையில் "திருச்செங்கோட்டில் ஒரு மாட்டுக்காரப்ப ஐயன் பாடிய பாடலுக்கு நான் தோற்றேன்" என்று எழுதிக் கொடுத்து விட்டு ஓடிப் போய் விட்டார். இப்படி முருகன் தமிழ்ப்பாடிய இடம் திருச்செங்கோடு. சங்கத் தமிழின் தலைமைப் புலவன் முருகன். தந்தை விறகு வெட்டியாக மதுரையில் செய்த விளையாட்டைப் பிள்ளை திருச்செங்கோட்டில் செய்தார்.

<u>பழனியாண்டவனும் செங்கோட்டு வேலனும்</u>

கலியுகம் தொடங்கிச் சுமார் 5100 ஆண்டுகள் முடிந்துவிட்டன. கலியுகத்தின் தொடக்கத்தில் மாபெரும் சித்தரும் காலாங்கி நாதரின் சீடரும், புலிப்பாணிச் சித்தரின் குருவுமான போகர் பழனிக்கு வந்தார். இவர் சீனாவில் போயாங் என்ற சீனரின் உடலில் கூடு விட்டு கூடு பாய்ந்து சீன நாட்டவராகவே வாழ்ந்தவர் என்றும் புலிப்பாணிச் சித்தர் இவரைப் பழனிக்கு அழைத்து வந்ததாகவும் தெரிகிறது. போகர் நவபாஷாணங்கள் எனப்படும் ஒன்பது மூலிகைகளை இணைத்துக் கட்டி இரண்டு முருகன் திருவுருவங்களைத் தயாரித்தார். ஒரு திருமேனிக்கு மூலிகைகளால் வெளிக்கவசமிட்டுப் பழனியில் ஞான தண்டாயுதபாணியாக வைத்தார்.

மற்றொரு திருமேனி முழுமை பெறுமுன் போகர் சமாதியடைந்தார். இந்தத் திருமேனி திருச்செங்கோட்டில் செங்கோட்டு வேலனாக நிறுவப் பெற்றது. இம்மூர்த்திக்கு வெளியில் மூலிகைக் கவசமில்லை. எனவே, இவருக்கு அபிஷேகமில்லை. உமையொரு பாகனாகத் தன்னுடைய தொன்மைக் கோலத்தைக் காட்டும் சிவபிரான் இத்தலத்தில் அர்த்தநாரீசுவராக வீற்றிருப்பதால், அபிஷேகம் அவருக்கு மட்டுமே நடைபெறுகிறது. இந்தச் சந்நிதியில் ஊறிவரும் சுனைநீர் சிறந்த தீர்த்தமாகத் திகழ்கிறது.

<u>அருணகிரிநாதரும் திருச்சோங்கோடும்</u>

வாக்கிற்கு அருணகிரி என்று போற்றப்பெற்ற அருணகிரியார் இத்தலத்தை வாயாரப் பாடுகிறார். திருப்புகழ் கந்தலங்காரம் கந்தரனுபூதி மூன்றிலும் பாடப்பெற்ற ஒரேதலம் திருச்செங்கோடு மட்டுமேயாகும். திருப்புகழில் இருபத்தொரு பாடல்கள் இத்தலத்திற்கு உரியவை.

அன்பாக வந்து உன்தாள் பணிந்து
ஐம்பூதம் ஒன்ற நினையாமல்
அன்பால் மிகுந்து நஞ்சாறு கண்கள்
அம்போ ருகங்கள்முலைதானும்
கொந்தே மிகுந்து வண்டாடி நின்று
கொண்டாடு கின்ற குழலாரைக்
கொண்டே நினைந்தும் அன்பேதுமண்டி
குன்றா மலைந்தும் அலைவேனோ?

மன்றாடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார் கடம்பை அணிவோனே
வந்தே பணிந்து நின்றார் பவங்கள்
வம்பே தொலைத்த வடிவேலா
சென்றே இடங்கள் கந்தா எனும்பொற்
செஞ்சேவல் கொண்டு வரவேணும்
செஞ்சாலி கஞ்சம் ஒன்றாய் வளர்ந்த
செங்கோ டமர்ந்த பெருமாளே

என்பது திருச்செங்கோட்டுத் திருப்புகழ். மன்றாடி தந்த மைந்தனை வாயாரப் பாடி, மங்கையர் மீது கொள்ளும் மயக்கத்தை மாற்ற வேண்டுகிறது இப்பாடல்.

தன் வாழ்வின் இறுதிக் காலத்தில் கிளியாக மாறிய அருணகிரியார் கந்தர் அனுபூதி பெற்றுப் பாடியநூல் கந்தரனுபூதி.. அனுபூதி என்றால் அனுபவிக்கத்தக்க செல்வம் என்று பொருள். தாயுமானவர்

கந்தரனு பூதிபெற்றுக் கந்தரனு பூதிசொன்ன
எந்தை அருள்நாடி இருக்குநாள் எந்நாளோ?

என்று பாடுகிறார். இந்த நூல் 51 பாடல்களைக் கொண்டது. இந்த நூல் மந்திர வடிவமானது என்றும் பழந்தமிழ் எழுத்துக்கள் 51 ன் அடையாளமென்றும் குறிக்கப் பெறுகிறது. திருச்செங்கோடு மட்டுமே இந்த நூலில் பாடப்பெற்ற ஒரே தலமாகும். வேறு தலங்களைப் பாடாமல் திருச்செங்கோட்டை மட்டும் ஏன் பாடினார்?

கந்தர் அலங்காரத்தில் திருச்செங்கோடு வேலனிடம் ஒரே வேண்டுகோள் வைத்தார் அருணகிரியார். இந்த வேண்டுகோளை முருகன் அவர் கேட்டபடி நிறைவேற்றி விட்டான். இதனால் நன்றியோடு கந்தர் அனுபூதியில் இத்தலத்தைப் பாடினார் அருணகிரியார்.

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழுஞ்சுடரே!
வைவைத்த வேற்படை வானவ னே! மற வேன்உனைநான்
ஐவர்க்கு இடம்பெறக் கால்இரண் டோட்டி அதில் இரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே

என்பது கந்தரலங்காரம். இந்த உடம்பு விழுவதற்கு முன்னால் என்னைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்கிறார் அருணகிரியார். முருகன் அருள்புரிந்தான். அவருக்குக் கிளிவடிவம் தந்து தன்னுடைய தோளில் வைத்துக் கொண்டான். இதனால் கந்தரனுபூதியில்

கூகா எனஎன் கிளைகூடி யழப்
போகா வகைமெய்ப் பொருள்பேசியவா
நாகா சல! வேலவ! நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே

என்று பாடினார் அவர். "என் உறவினர் கூடி அழுமாறு என் உயிர்போகாமல் மெய்ப்பொருளாகத் திகழச் செய்த நாகாசலப்பெருமானே! நீ நான்கு வகைக் கவிகளையும் பாடும் வேலன். தேவர்களின் முடிமணிபோல் திகழ்பவன்" என்று பாராட்டினார். நாகாசலம் என்பது பாம்புமலையான திருச்செங்கோடு. தனக்குச் சாகாவரம் தந்த பெருமானைத் தமிழால் பாடி மகிழ்கிறார் அருணகிரியார்.

சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித் தோனை, விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போதும் மறவாத வர்க்கொரு தாழ்வில்லையே.

என்பது திருச்செங்கோட்டைப் பாடிய கந்தரலங்காரப் பாடலாகும். அவன் சிவப்பானவன். உயிர்களுக்குப் பற்றுக் கோடானவன். செங்கோட்டு மலையில் திகழ்பவன். ஒளிவீசும் வேலன். உயர்ந்த தமிழ்ப் புலவன், வள்ளி மணவாளன், வளமார் கடம்ப மாலை சூடியவன், மயிலேறும் வடிவேலன். சாகும் வரை அவனை நினைக்க வேண்டும். அப்படி நினைத்தால் தாழ்வு வராது என்கிறார் அருணகிரியார். இந்த முருகனைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதாது. அந்தப் பிரமன் எனக்கு நாலாயிரம் கண் படைக்கவில்லையே என்று வருந்துகிறார் அவர்.

மாலோன் மருகனை, மன்றாடி மைந்தனை, வானவர்க்கு
மேலான தேவனை, மெய்ஞ்ஞான தெய்வத்தை, மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோடனைச் சென்று, கண்டு, தொழ,
நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே

என்று பாடுகிறார் அருணகிரிப் பெருமான். இவன் திருமால் மருகன். தில்லையம்பலத்தான் திருமைந்தன். தேவாதி தேவன். சிவஞானம் அருளும் தெய்வம். மீன்கள் பாயும் வயல் சூழ்ந்த செங்கோட்டு வேலன். அவனுடைய கோயிலுக்குச் செல்ல நாலாயிரம் கால் வேண்டும்.. அவனழகைக் காண நாலாயிரம் கண் வேண்டும். அவனைத் தொழுது வணங்க நாலாயிரம் கை வேண்டும். ஆனால் பிரமன் கஞ்சன், இரண்டு கால்கள் இரண்டு கண்கள் இரண்டு கைகள் படைத்து விட்டானே என்று ஏங்குகிறார் அருணகிரியார். மேலும்


சுழித்தோடும் ஆற்றில் பெருக்கானது செல்வம். துன்பமின்பம்
கழித்தோடு கின்றதுஎக் காலம்? நெஞ்சே கரிக்கோட்டுமுத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோடன் என்கிலை, குன்றமெட்டும்
கிழித்தோடு வேல்என் கிலை, எங்ஙனே முத்தி கிட்டுவதே?

என்று கேட்கிறார். சுழித்தோடும் ஆற்றுவெள்ளம் விரைவில் வடிந்துவிடும். அதுபோல நம்செல்வம் நிலையற்றது. துன்பம் இன்பம் இரண்டும் இல்லாமல் எப்பொழுது வாழ முடியும்?

என் மனமே! முத்துப் போன்றவன் முருகப் பெருமான். அவனைக் காவிரிக் கரையில் நிற்கும் செங்கோடன் என்று கூறவில்லை. எட்டுத்திக்கிலுமுள்ள மலைகளைக் கிழித்துச் செல்லும் அவனுடைய வேலைப் போற்றவில்லை. உனக்கு எப்படி முத்தி கிடைக்கும்? என்று தன்மனத்தைப் பார்த்துக் கேட்பது போல நம்மைப் பார்த்துக் கேட்கிறார் அருணகிரியார்.

தங்க நிறத்துச் செங்கோட்டு வேலன் தமிழையும் தருவான். தமிழ் பாடினால் தன்னையும் தருவான். வணங்கித் தொழுதால் வாழ்வு தருவான். இணங்கிப் பணிந்தால் எல்லாம் தருவான். தவம் செய் தவர்க்கே தண்ணருள் கிடைக்கும். சிவனருட் செல்வன் திருவருள் கிடைக்கும். அருணகிரியார் காட்டிய வழியில் அவனைத் தொழுவோம். அவனருள் பெறுவோம்.

செங்கே ழடுத்த சினவடி வேலும் திருமுகமும்
பங்கே நிறைத்தற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளம் சொரியும் செங் கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன் வந்து எதிர்நிற்பனே
செங்கோட்டு வேலன் திருப்புகழைப் பாடி என்றும்
மங்கலமாய் வாழ்வோம் மகிழ்ந்து.



மலேசியாவில் திருமுருகன் கோயில்கள்

(கவிஞர் வே. மகேந்திரன், ஈப்போ)



படைவீடா றுடையானைத் தமிழர் வாழும்
பரதேயம் அங்கெல்லாம் பாரிப் பானை
குடைவீடாம் மலைக்கோயில் கோலா லம்பூர்
குடவரையில் அருளுருவாய் நிற்பான் தன்னை
வடமா நிலங்களிலும் பினாங்குத் தீவின்
வளமான தண்ர்மலை அருளூற் றானை
இடைநிலமாம் வெள்ளிமா நிலம்ஈப் போவில்
எழில்கல்லு மலை, லகாட் சாலை யென்னும்

ஈரிடத்தும் பல்லாண்டாய்க் கோயில் கொண்டே
இனியபெரும் தைப்பூச, விசாக நாளில்
பேரருளை வழங்கிப்பிற சமயத் தாரும்
பெருமையுற வந்தங்கு கூடு கின்ற
சீரதனைப் பெற்றதமிழ்த் தெய்வ மென்னும்
“திருமுருகன்”, உலகத்துப் பிற நாட்டாரும்
பேரழகு வெள்ளிரதம் காவடிகள் காணப்
பெருந்திரளாய் வந்துகண்டு களிப்பார் தாமே!

நெல்வயல்சூழ் பசுமைவளம் நிறைந்து காணும்
நீடுபுகழ்க் கடாரமெனும் அலோர்ஸ் டாரில்
பல்லினமும் இணைந்தொன்றாய் வாழும் சுங்கைப்
பட்டாணி எனும்அழகு நகரந் தன்னில்
தொல்பழமைப் பெருநகராம் தைப்பிங் தன்னில்
சுடர்வைர நகர்தெலுக் இந்தான் தன்னில்
நல்லமைதி சூழ் கம்போங் கெபாயாங் தன்னில்
நவநகரி செம்பிலான் சிரம்பான் தன்னில்

எல்லையாம் மலேசியாவின் தெற்கில் மிக்க
எழில்நிறைந்த ஜோகூரில், அதற்கு முன்னே
தொல்புகழ்சேர் வரலாற்று மலாக்கா வென்னும்
சொல்லரிய பெருமையுறு நகரந் தன்னில்
பல்லினத்து மக்களெலாம் பக்தி யோடு
பரவிநிற்கச் சிங்கையிலும் கோயில் கொண்டு
நல்லருளை வழங்கிவரும் தன்னே ரில்லா
நாயகனாம் தமிழ்முருகன் திருத்தாள் போற்றி!

அருணகிரிநாதரும் ஆறுமுகன் பேரருளும்

(கவிஞர் வே. மகேந்திரன், ஈப்போ)



ஆறுமுகன் தடுத்தாட் கொண்(டு)அருளிக் காத்த
அருணகிரி நாதரெனும் அருள்செல் வர்தம்
பேறெனவே திருமுருகன் புகழை யெல்லாம்
பெருமையுறத்திருப்புகழாய், வண்ணம் வேறு
வேறெனவே சிலம்பொலி குலுங்கி னாற்போல்
வித்தகமாய்த் தமிழின்பம் பொங்கிப் பாயும்
ஆறெனவே அருள்மணக்க அடியார்க் கெல்லாம்
அமுதமெனப் படைத்திட்டார் வாழ்க! வாழ்க!

சந்தத்தால் தமிழின் பத்தால்
தத்துவப் பொருளின் பத்தால்
விந்தையாம் இசையின் பத்தால்
விரிபொருள் விளக்கத் தாலும்
மந்திரச் சொற்க ளாலும்
மறைபொருள் அடக்கத் தாலும்
சிந்தனை விருந்தாம் இன்பத்
திருப்புகழ் அருட்செம் பாட்டே!

தண்டமிழில் வித்தகமாய்த் தமிழ்முருகன் தத்துவமாய்க்
கண்டினிய கந்தர்அலங் காரமொடு அந்தாதி
வண்டமிழில் அநுபூதி மயில்விருத்தம் திருக்காப்பு
கொண்டலெனப் பொழிந்த குருமுனிவர் வாழியவே!

திக்குமொழி வாயர்களும் திருப்புகழைப் பாடுவரேல் திருந்திநாவும்
இக்கதனைச் சுவைத்தாற்போல் இன்புறுவர் தமிழ்ப்பேச்சில் ஏற்றம் கொள்வர்
மிக்குயர்ந்த பல்வண்ண மாம்சந்த முடுக்கிசையில் வியந்து நிற்பர்
நெக்குருக அருளுணர்வில் நீலமயில் ஊர்தியனை நெஞ்சில் ஏற்பர்

இக்கு - கரும்பு

அருணகிரிநாதர் திருவடி போற்றி

வண்ணத் திருப்புகழால் வடிவேலர்க் கணிசெய்து
மகிழ்ந்தாய் போற்றி!
வானுயர்ந்த அருணகிரித் திருநாமம் திருவருளால்
அடைந்தாய் போற்றி!
எண்ணமெலாம் ஆறுமுகன் திருவடியில் வைத்தமுதம்
பொழிந்தாய் போற்றி!
ஏற்றமிகு சந்தத்தால் ஏறுமயிலோன்புகழை
இழைத்தாய் போற்றி!
எண்ணரிய நல்லடியார் இதயமெலாம் குமரனருள்
விதைத்தாய் போற்றி!
திண்ணமுற வண்ணமுற திருமுருகன் அருட்பெருமை
தெளித்தாய் போற்றி!
திருப்புகழால் தமிழமுதம் தந்ததிரு அருணகிரி
திருத்தாள் போற்றி!

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள்
வரலாற்றுச் சுருக்கம்

இற்றைக்கு ஐந்நூறு ஆட்டுகட்கு முன், நினைத்த முத்தியளிக்குந் திருவருணையிலே தமிழகஞ் செய்த தவப் பயனால் அவதரித்தவர் ஸ்ரீ அருணகிரிநாதர். இவர் இளமையில் தனக்கு நேர்ந்த பிணியின் காரணமாக வல்லாள மன்னன் கோபுரத்தின் உச்சியினின்றும் உயிர் துறக்கும் பொருட்டு வீழ்ந்தார். அக் கோபுரத்தின் வடதிசையில் கோயில் கொண்டிருக்கும் முருகன் குருவுருவாகத் தோன்றி, அவரைச் செங்கரத்தினால் தாங்கி, "சும்மாயிரு சொல்லற" என்ற மௌன மறையை உபதேசித்து மறைந்தருளினார்.

அருணகிரிநாதர் குருவருள் பெற்று பலகாலம் தவநெறியில் நிலைத்து நின்று சித்தி பெற்றார். ஒருநாள் மூவருந் தேவருங் காணாத முருகவேள் பச்சை மயிலில் அவர்முன் தோன்றி "அருணகிரி! நம் திருப்புகழைப் பாடு" என்று பரமன் பணித்தருளினார். "வேதாகமங் கட்கும் எட்டாத நின் புகழை, கல்வி கேள்வி சிறிதுமில்லாத சிறியேன் எங்ஙனம் பாடுவேன்?" என்று அருணகிரியார் கூறினார்.

முருகன் அவருடைய நாவில் வேலின் அடியால் பிரணவம் எழுதி "முத்தி" என்று பாடு என்று பணித்தருளிச் சகலகலா ஞானங்களையும் வழங்கியருளினார்.

" அறிவுமதி தத்துவமும் அபரிமித வித்தைகளும்
அறியென இமைப்பொழுதில் வாழ்வித்த வேதியனும்" - திருவகுப்பு

"..... அருணகிரிநாதர் அருணைச்சிகரி
வடவாச லில்பயில நம்
பாதமலர் பாடுநீ என்ன அடியேனும் எப்
படிப்பாட என்ற அளவில்
பத்திதரு முத்திநகை யத்தி இறைவா எனப்
பாடென்று சொல்லி யியலால்
பூதலமும் எங்கிளையும் ஈடேற நாவில்
பொறித்தவ ருரைத்த கவிதைப்
புத்தமுது பன்னிரு செவிக்கு நிறையக் கொண்டு
போதமு னளித் தருளினால்
சீதள மலர்ச்சரண முதவுகர னூராளி
சிறுதே ருருட்டி யருளே
செயசெயென அமரர்தொழ அசுரர்முடி சிமறுமுனி
சிறுதே ருருட்டி யருளே"

- திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்

செந்தமிழ்க் குரவனாம் செவ்வேட் பரமன் இவ்வண்ணம் அடியெடுத்துத்தர, உடனே அருணகிரியார் திருவாக்கில் ஞான அருவிபோல தமிழ் வெள்ளம் பெருக்கெடுத்தது. 'முத்தைத்தரு' என்று தொடங்கும் திருப்புகழைப் பாடினார்.

உறங்குபவனை எழுப்பினால் உறக்கத்தில் உள்ள சுகத்தினால் மீளவும் உறங்கிவிடுவான். அதுபோல் அருணகிரிநாதரை சிவயோக நித்திரையில் இருந்து முருகன் எழுப்பி திருப்புகழைப் பாட அருளியபின் சுவாமிகள் மீளவும் சிவயோகத்திலேயே அமர்ந்து ஒடுங்கி இருந்தனர்.

இறைவன் அருணகிரிநாதரை "வயலூருக்கு வா" என்று அசரீரியாகக் கூறி, கட்டளையிட்டருளினார். அருணகிரிநாதர் வயலூர் சென்று, அங்கு முருகவேள் வேலினால் எடுத்த சக்தி தீர்த்தத்தில் முழுகி முருகனை வழி பட்டார். முருகன் ஒருமுகமும் நான்கு திருக்கரங்களுமாகக் காட்சி தந்து, திருப்புகழைத் தொடர்ந்து பாடு என்று அதற்குரிய அருளாற்றலைச் சிறப்பாக வழங்கியருளினார்.

"வயலி நகரியி லருள்பெற மயில்மிசை
உதவு பரிமள மதுகர வெகுவித
வனச மலரடி கனவிலு நனவிலும் மறவேனே" - திருப்புகழ்

பழநியில் அவருக்குப் பரமன் செபமாலை தந்தருளினார். பழநியில் கலிசைச்சேவகனார் என்ற சிறந்த முருக பக்தராகிய சிற்றரசர் அருணகிரிநாதருக்கு அரிய நண்பராக அமைந்தார். ஒருசமயம் இவருக்கு நேர்ந்த தலைவலி சுரத்தை "தலைவலி மருத்தீடு" என்ற திருப்புகழ் பாடித் தீர்த்தருளினார். கலிசைச்சேவகனாரை, சுவாமிகள் பல திருப்புகழ்ப் பாடல்களில் பாராட்டியுள்ளார்.

திருச்செந்தூரில் அருணகிரிநாதர் முருகனைப் பாடி திருநடன தரிசனம் பெற்றனர். திருச்செந்தூரில் இன்றும் பெருவிழாக்களில் 7-ம் நாள் சண்முகர் புறப்பாட்டில் பின்புறம் நடராஜ அலங்காரம் செய்து காட்டுகின்றனர். திருவேத்தில் பிரணவ உபதேசம் பெற்றனர். சனியூரில் வில்லிமுத்தூரைச் சந்தித்தார். வாதத்தில் தோற்ற புலவர்களது செவிகளை அறுத்தொறுக்கும் செயலை மாற்றுதல் வேண்டும் என்று கருதி, அவருடன் வாதிட்டு கந்தரந்தாதி பாடி வென்று, அவரைத் திருத்தி அருள் புரிந்தார்.

"எதிரும்புலவன் வில்லிதொழ எந்தையுனக்கந் தாதிசொல்லி
ஏழைப்புலவர் செவிக்குருத்தோடு எறியுங்கரிவு
பறித்தெறிந்தே"
- திருமலை முருகன் பிள்ளைத்தமிழ்

காளி உபாசகனாகிய சம்பந்தாண்டான் என்றவனுடன் வாது செய்து, திருவருணையில் சிவகங்கைக்கு அருகில் உள்ள 16 கால் மண்டபத்தின் ஈசானத் தூணில் இருந்து முருகனை உலகமறிய வருவித்துக் காட்சி தரச் செய்து உதவினார். அப்போது பாடியது "அதலசேடனாராட" என்ற திருப்புகழ். திருத்தணிகையிலும் திருநடன தரிசனம் பெற்றனர். வடக்கே சரஸ்வதிநதி பாயும் வயிரவிவனம் முதலிய திருத்தலம் வரை சென்று பாடினார். இலங்கையில் திருக்கோணாமலை, கதிர்காமம் முதலிய தலங்களையும் கண்டு களித்துப் பாடினார்.

மன்னவன் பிரபுடதேவராசனுடைய கண் ஒளி குன்றிய காரணத்தினால், அருணகிரிநாதரை விண்மலர் கொணருமாறு வேண்டினான். சுவாமிகள் அருணை மேற்புறமுள்ள பேய்க்கோபுரத்தில் தமது திருமேனியை வைத்து கிளியுருவங்கொண்டு விண்ணுலகஞ் சென்று, பாரிஜாத மலர் கொணர்ந்தார். அவர் அப்படிக் கிளியுருவுடன் வந்து அமர்ந்த கோபுரத்தை இன்றும் கிளிக்கோபுரம் என்று திருவண்ணாமலையில் கூறுவார்கள். பிரபுடதேவனுக்கு கண்ணொளி யுண்டாயிற்று. அன்றி பாரிசாதமலரின் மணத்தினால் அங்குள்ள பலரும் கண்ணொளி பெற்றார்கள். அருணகிரியார் அப்போது கந்தரநுபூதி பாடி எல்லோரையும் இன்புறச் செய்தார்.

சம்பந்தாண்டான் அவருடைய திருமேனியை இரவில் எடுத்து கோயிலில் அருணாசலேச்வரருக்கு மேற்கே புதைத்து விட்டான். அந்த இடத்தில் பிரபுட தேவ ராஜா மண்டபம் கட்டி தன் பூச்சக்கரக் குடையை நாட்டினார்.

பின்னர் அருணகிரிநாதர் தன் பழைய உருவைக் காட்டி எல்லோருக்கும் அருள் புரிந்து ஆனிமாதம் பௌர்ணமி கூடிய மூலநட்சத்திரத்தன்று கந்தவேளின் கழலில் கலந்து பேரின்பப் பெருவாழ்வில் அமர்ந்தருளினார்.

அருணகிரிநாத சுவாமிகளை, தாயுமானார், சிதம்பர சுவாமிகள், அந்தகக்கவி வீரராகவ முதலியார், வரகவி மார்க்கசகாய தேவர், தொட்டிக்கலை சுப்பிரமண்ய முனிவர், சிதம்பர முனிவர், கத்தப்ப தேசிகர், இராமலிங்கர், பாம்பனடிகள் முதலிய ஆன்றோர்கள் துதி செய்து அருள் பெற்றார்கள்.

அருணகிரிநாதர், திருப்புகழ், திருவகுப்பு, கந்தர் அந்தாதி, கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, வேல் மயில் விருத்தங்கள் என்ற ஆறு நூல்களைப்பாடினார்.
முருகப் பெருமானிடம் பிரணவ உபதேசம் பெற்றவர்கள் மூவர். சிவமூர்த்தி, அகத்தியனார், அருணகிரிநாதர்.

"வேலா சரணம் சரணம் என்மேல் வெகுளாமல்இனி
மேலாயினும் உடைக்கண்பார் பருப்பத வேந்தன்மகள்
பாலா குறுமுனியார்க்கும் திருப்புகழ்ப் பண்ணவர்க்கும்
ஆலாலம் உண்டவர்க்கும் உபதேசித்தஎன் ஆண்டவனே"

என்று முருகர் அந்தாதி கூறுகின்றது.
முருகனடியார்கள் அருணகிரிநாதரை வணங்கினால் முருகனருள் தானே வரும்.

திருமுருகன் ஒருவனையே பாடும் நியமங்கொண்டு பரமபதி விரதநிலை யிதுவே என உலகுக்கு உணர்த்திய பரம குருநாதர் அருணகிரிநாதர்,. சிவயோக நெறியில் பெருஞ்சித்தி பெற்றவர். நாதா என்று முருகனே அழைக்க, அருணகிரிநாதர் எனப் பெற்றவர். நாதமயமாய் நின்று நாதப்பிரமமாய் விளங்கியவர்.

அருணகிரிநாதர் அடிமலர் வாழ்க

குறிப்பு கொடுத்துதவியவர் : கவிஞர் பெ. சண்முகம்



மகன் அருணகிரியாரை அன்னையார் தம் மகளிடம் ஒப்படைத்தல்
The mother placing Arunagiri under the care of her daughter



அனைத்தும் இழந்த அருணகிரியார் ஆண்டியாய்த் திரிதல்
Loosing everything Arunagiri wanders about



மனம் உடைந்த அருணகிரியார் கோவில் கோபுரத்திலிருந்து விழுந்து இறக்கத் துணிதல்
Loosing heart Arunagiri determines to put an end to his life by falling down from the temple tower



அருணகிரி அடிகளாருக்கு முருகன் காட்சி தந்து அருள் புரிதல்
Lord Muruga appears before Saint Arunagiri and bestows grace



ஆறுபடை வீடுகளைப் பற்றித் திருப்புகழ் பாடுகிறார் அருணகிரி அடிகள்
Saint Arunagiri extemporising the Thiruppugazh on the six abodes of Lord Muruga



அருணகிரி அடிகள் கிளி உருவம் பெற்று மன்னருக்கு மலர் அளித்தல்
Saint Arunagiri in the form of a parrot offers the flower to the King

A BRIEF STORY ABOUT KAUMARAM.COM

I am known as SEynthan. After retirement, I decided to live in Canada for a while. I spent my time walking around a beautiful lake, surrounded by huge trees and magnificent mountains. This was very inspiring for the mind. While walking I will wear the 'walkman' headphones playing the chant "Om Saravanabhava". That was like a meditation to me. It inspired me to 'talk' to Murugan.

One morning, while walking around the lake, I wondered if there was a website in Tamil, for Murugan. I found out that there were none although there were a couple of them in English.

Immediately, a flash of thought came to me - to start a website for Murugan in Tamil. I always enjoyed working with computers, and I thought serving Murugan with this knowledge in technology would be a great way to serve Him!

The next morning I began searching for a name for the website. I randomly picked a book from my bookshelf and its title was "Kaumaram". I looked up for the meaning of that word and it meant "Murugan worship". I realized that this was Murugan's command! I registered that name on January 16th 2001. This became the first website in Tamil for Lord Murugan! A few days later, I asked Murugan for a 'logo' for the website, and He gave the logo in my dream (with His Blessings)!

I had only four or five pages in the site. The opening page, Kandhar Sashti Kavasam, Kandhar Anuboothi and a couple of TMS Murugan song lyrics. A week after launching the site, I decided to compile the entire Thiruppugazh in Tamil. (1327 poems). While typing them, I experienced so many miracles of Him. It is truly a wonderful experience. Within a few months Kaumaram.com's visitor number increased from about six, to more than a hundred per day. As the website expanded, I needed assistance. VaLLi joined the service in September 2001. We then started adding more materials to our website. It started growing, slowly but steadily. We compiled all the other works of Arunagirinathar, Pamban Swamigal as well as all verses of the Kandha Puranam. We realized the 'inner messages' in these works - which God, our Murugan, wanted us to realize!

We started our world tour (yatras) to Murugan temples and those with Murugan sannithis in the year of 2002. We took pictures and have documented them with some details at Kaumaram.com. We also met some scholars who were eager to provide the meanings to the sacred texts of Lord Murugan to be included in Kaumaram.com. Audio recordings of these sacred texts (in various styles) were also included progressively. In these spiritual journeys, we met several devotees and some of them are now our very dear friends.

During our 'yatras', we sang Thiruppugazh, Kandhar Alangkaram and Anubudhi at the temples. Since we had no musical knowledge, we found that the usual singing styles of these songs were difficult for us to follow. So we started creating light styled tunes for these songs and included them in Kaumaram.com.

We strongly believe that anyone who sings with sincere love will find true happiness and blessings of Lord Murugan. We always encourage devotees who are eager to sing with confidence and not to be shy or think they do not qualify. Some of the devotees we have met have contacted us telling that they are now singing with confidence in the temples.

What is the direction of Kaumaram.com? Well, we wish that Kaumaram.com will always be a place (in the web world) where Lord Murugan's devotees find peace and happiness. It will always be dedicated to Lord Murugan and His Devotees, and will remain non-commercial. All works submitted to Kaumaram.com is done only in the name of bakthi towards Lord Murugan.

We, at Kaumaram.com, are simply providing a platform in the web world, giving access to thousands of pages related to Lord Murugan. Some of the sections in our website are: articles, worldwide Murugan temples' information (with pictures), Kandha Puranam, image gallery, sacred texts, poems, kavasams, slokams, mantras, bajan songs, song lyrics of famous singers, presentations by children, and various audio-video recordings. We have made several of these works downloadable for our visitors.

We take this opportunity to sincerely thank Thiru Gopala Sundaram of the USA, Thiru Natarajan of Tamilnadu and Thiru (Prof) Singaravelu Sachithanantham from Malaysia in providing meanings in Tamil and English with transliteration, to various sacred texts at Kaumaram dot com. It is through their selfless service, that thousands of Murugan devotees around the world got to know the meanings of several texts on Lord Murugan.

We find peace and true happiness doing this service. If Kaumaram.com has benefited you, please introduce it to other devotees of Lord Murugan. May the blessings of Lord Murugan be with you.

Best wishes.

vetrivEl iRaivanukku arOharA!

Sincerely,

SEynthan and VaLLi.
(webmasters of Kaumaram.com)



கௌமாரம் இணையத்தளத்தை பற்றிய சில வரிகள்.

'சேந்தன்' என்று என்னை அழைப்பார்கள். வேலை ஓய்வு பெற்றவுடன் கனடா நாட்டில் சில காலம்வசித்தேன். அங்கே, ஒரு அழகிய ஏரியைச் சுற்றி நடப்பது என் வழக்கம். அதன் சுற்றுவட்டத்தில் உயரமான மரங்களும் பிரும்மாண்டமான மலைகளும் இருந்தன. அக்காட்சி என் மனதிற்கு மிக்க ஊக்கத்தையும் மகிழ்ச்சியையும் கொடுத்தது. அப்போது, எனது காதுகளில் 'வாக்மேன்' அணிந்து கொண்டு, 'ஓம் சரவணபவா' என்ற முருக மந்திரத்தை கேட்டுக்கொண்டு நடந்துவருவேன். அது ஒரு தியான நிலமையைக் கொடுத்ததுமல்லாமல் முருகனுடன் 'உரையாட'வும் ஊக்கம் தந்தது.

ஒரு நாள் காலையில் ஏரியைச் சுற்றி நடந்து வருகையில், 'முருகனுக்காக தமிழில் ஒரு இணையத் தளம் இருக்குமா?' என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. பிறகுதான் தெரிந்தது ஆங்கிலத்தில் ஓரிரண்டு தளங்கள் இருந்தபோதிலும், தமிழில் ஒன்றை இன்னும் எவரும் அமைத்ததில்லை என்று. அச் சமயத்திலேயே முருகனுக்கு தமிழில் ஒரு இணையத் தளத்தை அமைக்க எனக்கு எண்ணம் உதித்தது. கணிணி வேலைப்பாடுகள் என்றால் எனக்கு மிகவும் விருப்பம். இத் தொழில்நுட்ப அறிவை முருகனுக்காகப் பயன்படுத்தி, அவனுக்குச் சேவை செய்வது மிகவும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்று முடிவெடுத்தேன்.

மறுநாள் காலையில் அந்த தளத்திற்கான ஒரு பெயரை தேட ஆரம்பிக்கையில், என் புத்தகச் சேகரிப்பிலிருந்து ஒரு நூலை எடுத்தேன். அதன் தலைப்பு 'கௌமாரம்'. பிறகு அதன் பொருள் 'முருகன் வழிபாடு' என்று அறிந்துகொண்டேன். உடனே இதுதான் முருகனிடம் வந்த 'கட்டளை' என்று தோன்ற, அப்பெயரை இணையப் பதிவகத்தில் 16 ஜனவரி 2001ல் பதிவு செய்து கொண்டேன். இதுவே உலகளாவிய இணையத்தில் முருகனுக்கான முதல் தமிழ் இணையத் தளமானது. சில நாட்கள் சென்று, கௌமாரத்திற்காக ஒரு சின்னம் வேண்டுமென்று முருகனிடம் கேட்க, முருகன் அதனையும் எனக்குக் கனவில் காட்டி அருளினான்!

தொடக்கத்தில் 'கௌமாரம்' சுமார் நான்கு அல்லது ஐந்து பக்கங்களைக் கொண்டிருந்தது. முகப்பக்கம், கந்த சஷ்டிக் கவசம், கந்தர் அநுபூதி, இவற்றோடு பிரபல பாடகர் டி.எம்.எஸ். அவர்களின் சில முருகன் பாடல் வரிகள் மட்டுமே இருந்தன. சுமார் ஒரு வாரம் கழித்து, திரு அருணகிரிநாதரின் திருப்புகழ் அனைத்தையும் இணையத்தில் சேர்க்க முடிவெடுத்து, 1327 பாடல்களையும் கணிணியில் தட்டச்சு செய்தேன். இதைச் செய்துகொண்டிருக்கும் நாட்களில் முருகனின் அருளானது பலமுறை எனக்குக் கிட்டியது. பேரானந்தத்தைத் தந்தது! ஆரம்பத்தில் ஒரு நாளில் சுமார் ஆறு பார்வையாளர்கள் 'கௌமாரம்' இணையத்தளத்தைப் பார்த்தனர். சில மாதங்களிலேயே அவர்களின் எண்ணிக்கை நூறைத்தாண்டியது. இந்தச் சேவை வளர, எனக்கு உதவி தேவைப்பட்டது. வள்ளி அவர்கள் செப்டம்பர் 2001ல் கௌமாரத்துடன் சேவை புரியச் சேர்ந்தார். அதன் பிறகுதான் மேலும் பல பகுதிகளை இணைத்தோம். திரு அருணகிரிநாதரின் மற்ற படைப்புகள், திரு பாம்பன் சுவாமிகளின் நூல்கள், கந்த புராணத்தின் அனைத்து செய்யுட்கள் ஆகியவற்றை இணைத்தோம். இவற்றுள் அடங்கிய உட்பொருளையும் முருகனின் விருப்பத்தால் அப்போது நாங்கள் உணர்ந்துகொண்டோம்!

பல நாடுகளில் இருக்கும் முருகன் ஆலயங்களையும் முருகன் சன்னிதி கொண்ட தலங்களையும் ஒரு ஆன்மீக சுற்றுலாவாகக் காண 2002ல் தொடங்கினோம். அவ்வாலயங்களின் சில படங்களையும் விவரங்கள் சிலவற்றையும் கௌமாரத்தில் இணைத்தோம். சில பேரறிஞர்களையும் சந்தித்தோம். கௌமாரத்தில் உள்ள சில திருப்பாடல்களுக்கு விளக்கம் கொடுக்க முன்வந்தார்கள். இவற்றின் பலவகையான ஒலிப்பதிவுகளையும் இணைத்துவந்தோம். இவ்வான்மீக பயணத்தில் பல பக்தர்களையும் சந்தித்தோம். இப்போது அவர்களில் சிலர் எங்களின் நெருங்கிய நண்பர்களாகவும் இருக்கின்றனர்.

எங்களின் ஆன்மீகப் பயணத்தில், திருப்புகழ், கந்தர் அலங்காரம், அநுபூதி போன்ற பாடல்களை ஆலயங்களில் பாடிவந்தோம். எங்களுக்கு இசை அனுபவம் இல்லாததால், மற்ற பாடகர்களைப்போல் எங்களால் பாட முடியவில்லை. ஆகையால் அவற்றை எளிய முறையில் மெட்டுக்கள் அமைத்து, கௌமாரத்தில் இணைத்தோம். உண்மையான அன்போடு இப்பாடல்களை எவர் பாடினாலும் அவர்களுக்கு முருகனின் அருளும் ஆனந்தமும் நிச்சயமாகக் கிடைக்கும் என்பது எங்களின் ஆழ்ந்த நம்பிக்கை. பக்தர்களை அச்சமின்றி, உற்சாகத்துடனும் அன்போடும் முருகனுக்குப் பாட எப்போதும் நாங்கள் ஊக்கம் தருவோம். அவர்களில் பலர், ஆலயங்களில் தன்னம்பிக்கையோடும் ஆனந்தமாகவும் பாடுவதற்கும் ஆரம்பித்திருக்கிறார்கள்.


கௌமாரம் இணையத் தளத்தின் நோக்கம் என்ன? என்றென்றும் முருகனுக்கும் அவன் இணையத் தளத்தின் நோக்கம் என்ன? என்றென்றும் முருகனுக்கும் அவன்
அடியார்களுக்கும் இணைய உலகில் இருந்துகொண்டு அவர்களுக்கு மன அமைதியையும் மகிழ்ச்சியையும், எவ்வித ஆதாய நோக்கமும் இல்லாமல் கொடுக்கவேண்டும் என்பதே. கௌமாரத்தில் இணையும் அனைத்து வேலைப்பாடுகளும் நம் இறைவனான முருகப்பெருமானிடம் காட்டும் உள்ளன்பையே அடிப்படையாக வைத்திருக்கும்.

கௌமாரம் இணையம் முருகன் சம்பந்தப்பட்ட ஆயிரக்கணக்கான பக்கங்களை முருகன் அடியார்களுக்கு வழங்கும் தளம்! இதிலுள்ள பகுதிகளில் சில: கட்டுரைகள், ஆலய விவரங்கள் (படங்களுடன்), கந்த புராணம், திருவுருவப் படங்கள், துதிப்பாடல்கள், கவசங்கள், பஜனைப் பாடல்கள், பிரபல பாடகர்களின் பாடல் வரிகள், மந்திரங்கள், சுலோகங்கள், சிறுவர் படைப்புகள், பலவிதமான ஒலி-ஒளிப் பதிவுகள். இவற்றில் பலவற்றை பார்வையாளர்கள் பதிவிறக்கிக்கொள்ளும் வசதியையும் அமைத்துள்ளோம்.

இச் சந்தர்ப்பத்தில், அமெரிக்காவைச் சேர்ந்த திரு கோபால சுந்தரம் அவர்களுக்கும், தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு நடராஜன் அவர்களுக்கும், மலேசியாவைச் சேர்ந்த பேராசிரியர் திரு சிங்காரவேலு சச்சிதானந்தம் அவர்களுக்கும் எங்களின் மனமார்ந்த நன்றியைப் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களின் தன்னலமற்ற சேவையால் உலகெங்கிலும் வசிக்கும் பல்லாயிரக்கணக்கான முருக பக்தர்களுக்கு முருகனுக்கான திருப்பாடல்களின் பொருள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கிடைத்தது.

இச் சேவையைச் செய்வதில் எங்களுக்கு பேரானந்தம் கிடைக்கிறது. இச்சேவையால் தாங்களும் பயன் அடைந்தீர்களானால் மற்ற முருக பக்தர்களுக்கும் இந்த இணையத் தளத்தை அறிமுகப்படுத்துங்கள். முருகன் அருள் நிலைக்க! நல் வாழ்த்துக்கள்.
வெற்றிவேல் இறைவனுக்கு அரோகரா!

அன்புடன்,
சேந்தன் - வள்ளி
(கௌமாரம் இணைய நடத்துனர்கள்)





LANGUAGE AND STYLE OF THIRUPUGAZH

By Prof.Anantha Raman-Chennai -Disciple of Pithukuli Murugadas.

Tiruppugazh is a collection of Tamil religious poems written in a language and style following the pattern of classical Tamil literature called Sangha Kala Tamil. Which quite different from pure classical Tamil and contains many words, particularly from Sanskrit as we notice in Devendra Sangha Vaguppu. Thiruppugazh is a set of songs that kindles the music of devotion in one's heart and stimulates spiritual awakening in the mind. It is an invaluable treasure.

Apart from songs on Muruga, Thiruppugazh deals with 64 episodes of Lord Siva (Tiruvilayadalgal) and the power of Sakti (Parvati). References have also been made to the Ramayana and the Bhagavatam.
The metre in Tiruppugazh is more rhythmical than the stylised classical one. Most of the songs have the reference to Kuravas and hills, and the imagery of the bees making honey from scarlet *ceccai* flowers and are characteristic of the *kuriñci* landscape (Thenundhu Mukkanigal).. The union which Arunagirinathar uses to symbolize this , however, is that of the soul with God, and the imagery specifically calls to mind the legend of Murugan's wooing of Valli, the daughter of a Kurav chief (Iyaluchitha vanchi Kayarvahi). This appropriation of secular imagery to religious purposes is characteristic of the Thiruppugazh: it turns the language formerly used to celebrate carnal love to celebrate God.

Though Arunagirinathar composed Thiruppugazh, the verses are written in manuscript form at different sources. Many ardent devotees have made efforts to retrieve them and bring them to light like Sri. V.T. Subramaniam Pillai of Tiruthani, Sri Chengalvaraya Pillai, a great devotee of Lord Muruga, Sri Sachidhananda Swamigal of Vallimalai , a disciple of Saint Seshadri swamigal, Pamban Swamigal, Sri T.M. Krishna Swamy Iyer, Thiru Kirupananda Vaariyar, Pithukulli Sri Murugadoss, Guruji Sri A.S. Raghavan etc. They have taken the glory of Thiruppugazh to great heights.

Thiruppugazh" is a musical mantra that would lead the aspirant to the path of devotion, enlightenment and bliss. The songs are studded with pearls (muthu) of devotion and wisdom. Legend has it that Shree Arunagirinathar himself was transformed into a new person by the grace of Lord Muruga and composed his first song: "Muthai tharu pathi thiru nagai.."

Arunagirinathar's Kandhar Alangaram, Kandhar Anubhoothi, Kandhar Andhathi, Viruthams on Vel and Mayil etc. offer to his favourite deity in a garland of songs (Paamalai) , not a garland of flowers (Poomalai). All three paths of life viz Karma marga, Gnana marga and Bhakthi margi are reflected in most of his lyrics.


It is believed tha he has composed over 16,000 songs covering all aspects of life but only 1,365 songs have so far been traced. The best path that leads to ultimate salvation and puts an end to this cycle of birth and death is one of knowledge, Gnana Marga as is seen in Sivanar Manankulira where he stresses on "Arul Gnana Inban Athu, Purivaye."He believed that Bhakti Marga, the path of devotion, is equally compatible. ("Bakthiyal Yaam Unnai, Pala Kalum, Patriye Ma Thiruppugazh Paadi"). Also he stressed on the importance of nama Sangeerthanam in Kandar Anubhoothi ("Paadum Paniye Paniyai Arulvai." (Grant me a life that I could devote entirely for singing your praise).

He found as much joy in singing the glory of Vishnu or Narayana as that of Siva or Muruga. He visualized Muruga as admiring young Krishna's `mischiefs' like stealing butter ("Navaneethamum Thirudi")

To attain wealth and prosperity he composed the song "Charana Kamalalayathai Arai Nimisha." "Ainkaranai Otha Manam" telling us how to lead a happy and harmonious life and yet be in the path of Karma yoga .

Sri Arunagirinathar had experienced the presence of Muruga at the northern side of the temple of Tiruvannamalai (Arunai Thiru Gopurathe Antha Vayilukku Vada Arukil Sendru Kandu Konden). Around 500 years later, Sri Ramana Bhagavan had come exactly at the same place and had attained Self realization.

Blessed are those who know the Tiruppugazh and have tasted its divine nectar. With the same spirit, I continue my divine musical journey. May we continue to carry this Olympic torch of our rich cultural heritage to the next generation....!



வள்ளலார் கண்ட முருகன்

செ. மோகன் குமார்
விரிவுரைஞர், ஆசிரியர் கல்விக் கழகம் ஈப்போ வளாகம்

உலகம் கண்டு வியக்கும் ஒப்பற்ற ஞானியருள் வடலூர் இராமலிங்க அடிகளாரும் ஒருவர். திருஞானசம்பந்தரைப்போல இளம் வயதில் இறையருள் பெற்றவர். மற்ற குழந்தைகள் போல தெருவில் ஓடியாடித் திரிந்த இராமலிங்க அடிகளாரை இறைவர் ஆட்கொண்ட விதமோ கண்டு, கேட்டு, உய்ந்து உணரத்தக்கது.

இராமலிங்க அடிகள் தம் இளம் வயதில் கல்வியின் மீது நாட்டம் இல்லாமல் இருந்தார். இதனால் பெரிதும் துயரத்திற்குள் ஆனார் அவரது சகோதரர் சபாபதி பிள்ளை. கல்வி கற்காத பிள்ளையை வீட்டில் சேர்க்கக் கூடாது என்று தம் மனைவியிடம் கட்டளையிட்டார். இதனால் இளம் வயதில் இராமலிங்க அடிகள் தெருவில் சுற்றியும் விளையாடியும் காலத்தைப் போக்கினார். அவரை மறைமுகமாகக் காத்தும் ஊண் அளித்தும் வந்தார் அண்ணியார் பாப்பாத்தி அம்மாள். ஒரு நாள் துயரம் தாளாமல் இராமலிங்க அடிகளாரின் முன் அண்ணியார் கண்கலங்கிப்போனார். இதனைக் கண்டு சொல்லொணா, துயரங்கொண்ட இராமலிங்க அடிகள், இனி இல்லத்திலேயே படிக்கிறேன் என அண்ணியாரிடம் வாக்களிக்கின்றார். கணவர் சபாபதி பிள்ளையின் இசைவோடு இல்லத்தின், மேல் மாடியில் தனியொரு அறையை ஏற்பாடு செய்து தருகிறார். உணவு உண்ணும் நேரத்தைத் தவிர இராமலிங்க அடிகள் அவ்வறையிலேயே இறைவுணர்வில் திளைக்கத் தொடங்கினார். உற்றார்; உறவினர், தோழர், ஆட்டம் பாட்டம் கேளிக்கை என்று எதுவும் இல்லை அந்த இளம் பிள்ளைக்கு. அறையினுள்ளோ பாடப்புத்தகம் இல்லை, எழுத்து இல்லை, வாசிப்பு இல்லை, பேச்சும் இல்லை. அப்படி என்னதான் நடந்தது? ஒரு பெரிய நிலைக்கண்ணாடியும் ஒரு சிறிய விளக்கும் திருவாசக கையேடும் இருந்தன. விளக்கையேற்றி ஒளிவெள்ளத்தில் இறைவரை வணங்கி தம்மை மறந்து இருந்தார். நாளடைவில் கண்ணாடியில் அனைத்து உருவங்களும் மறைந்து, அருளொளி தோன்றலாயிற்று. மெல்ல மெல்ல அவ்வொளி ஞான ஒளியாக மிளிர்ந்து சீர் கொண்ட முருகன் தோன்றினார். இளவயது இராமலிங்க அடிகளாருக்குப் பிள்ளைத் தமிழை வாரி வழங்க தமிழ்க் கடவுளான சிறுமுருகன் தோன்றினார். பிள்ளையின் நிலையும் மேன்மையும் இன்னொரு பிள்ளைக்கல்லவா தெரியும்; புரியும். ஒப்பற்ற அத்திருக்காட்சியை இராமலிங்க அடிகள் பதிவுசெய்யும் வாக்கும் பாங்கும் பத்தி உலக வரலாற்றில் பொன்னெழுத்துச் சிகரங்கள்.

"சீர்கொண்ட வதனங்கள் ஆறும் திகழ்கடப்பந்
தார்கொண்ட பன்னிரு தோள்களும் தாமரைத்தாள்களும் ஓர்
கூர்கொண்ட வேலும் மயிலும்நற் கோழிக் கொடியுமருட்
கார்கொண்ட வண்மைத் தணிகாசலமுமென் கண்ணுற்றதே"

இராமலிங்க அடிகளாருக்குத் தணிகாசல முருகன் தம் முழுத் திருவுருவத் திருமேனியை காட்டியருளிய பாங்கு அடிகளாரின் அரும்பெரும் மாட்சியையும் திரட்சியையும் அருளாட்சியையும் நம் முன் விரிக்கின்றது. ஆதிசிவன் படைத்தருளிய தம் ஆறு முகத்தையும் பன்னிரண்டு தோள்களையும் மென்மையான சிவந்த தாமரை போன்ற திருவடிகளையும், முழு சத்தியின் பிறப்பான வேலினையும், அருளாட்சியின் கருணையின் வடிவான கோழியும் கொடியும் கொண்டு கருணைக் கடலாகத் திருமுருகன் திருக்காட்சி தந்தார். வெறுமனே முருகன் காட்சி தரவில்லை. தம் முழு அருளாட்சியையும் அடிகளாருக்கு வழங்க வேண்டும் என்ற ஒப்பற்ற நிலைபாட்டினை திருமுருகனின் திருக்காட்சி இங்கு மெய்பித்துக் காட்டுகின்றது.

தவிர, தம்மை ஆட்கொண்ட முருகப் பெருமானே முதல் குருவென்று அடிகளார் உரைக்கும் மாண்பு அருமை.

> கல்வியெலாம் கற்பித்தாய் நின்பால் நேயம்
> காணவைத்தாய் இவ்வுலகம் கானல் என்றே
> ....
> செல்வாருட் குருவாகி நாயி னேனைச்
> சிறுகாலை ஆட்கொண்ட தேவ தேவே"


ஆதிசிவன் பரம்பொருளாக முருகன் வடிவிலே வந்து அருள்தரும் பாங்கு அருமையிலும் பெருமை. இறைவரே குருவான நிலை, இராமலிங்க அடிகளார் பெற்ற அதிசுக்குமப் பேறு. பள்ளி செல்லாமல் அனைத்து ஞானஅறிவையும் இராமலிங்க அடிகள் பெற்றார். அவ்வமயம் அடிகளாரின் அகவை ஒன்பது.

" என்னை ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டுகொண்ட அருட்கடலே "

இராமலிங்க அடிகளார் தம் இளவயதில் நாள்தோறும் கந்தகோட்டத்திற்குச் சென்று முருகனைத் தவறாது வழிபட்டு வந்தது இங்கு நோக்கத் தக்கது. திருமுருகனின் திருக்காட்சி அருளோடு தம் முதல் கன்னிச் சொற்பொழிவை ஆற்றுகின்றார் பெருமான். ஒன்பதாம் அகவையில் அச்சொற்பொழிவு வந்தோர் அனைவரையும் ஈர்த்து அணைத்தது. குழந்தை இராமலிங்க அடிகளின் பேச்சும் வாக்கும் இறையருள் மிக்கவை. திருமுருகனின் கன்னித்தமிழ் அடிகளாரின் திருவாய்மொழியாக மலர்ந்தன.

திருமுருகன் எளியோனாக வந்து அருளும் காட்சி நம்மையும் பரவசத்தில் ஆழ்த்துகின்றது. அழைத்தவர் குரலுக்கு வருவான் திருமுருகன் என்பது சாட்சி. மீட்சி பெறுவோம், உண்மை வழிபாட்டால். பொய், புரட்டு, வேடம், புகழ், பட்டம், பதவி என்ற மாயை விட்டொழிந்தால் மட்டுமே அருளாட்சி பெறமுடியும். அருள் என்பது இருள் இல்லாதது; பொருள் நிறைந்தது.

"அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி"



பத்தியின் முதிர்கொள
சந்தத் திருப்புகழ் ஓதுவீர்



பாவலர் மா. தமிழன்பன்,
சித்தியவான்

யாப்பு : எண்சீர் ஆசிரிய விருத்தம்

தருமெய்ச் சுவையில் திளைத்தும் , நீங்காத்
தகையுறு மனத்தே நிலைத்தும் , துய்ய
நறுந்தேன் கசக்கும் படிசெய் நம்மின்
நற்றமிழ்த் திருப்புகழ் ஓதுவார் நாளும்
செறியும் வாழ்வியல் நெறியு ணர்ந்தே
திருவருள் பெற்று வையமி சையே
பிறிதோ ருருபொருள் வேட்கை யின்றிப்
பிறப்பின் பயனை அறிகுவ ரன்றோ !

சத்திய ஞானக் கல்வியு மோங்கித்
தனிப்பெரும் சிறப்புகள் அடைய நேர்ந்தே
எத்துணை பேரிடர் எதிர்கொண் டாலும்
இம்மியும் தளர்விலாப் பணிக ளாற்றி
மெத்தவு முளத்தினில் திடமே நல்கும்
முத்தமிழ்ச் செல்வம் திருப்புகழ் தன்னை
பத்தியின் முதிர்கொள மாமருந் தாகப்
பயனுறு வோர்க்கு , வழித்துணை யாகும் !

குறிப்பு _ பத்தி _ அன்பு ; ஒழுக்கம் ; ஒழுங்கு ; தொண்டு .



திருப்புகழ் நூலிற் சிந்தை யூன்றின்
சேர்தரு நலமோ மலையென வாகிக்
கருத்துள இன்னுரை மொழிய லுற்றே
கவலுறா தென்றும் நல்வழி காட்டி
வருத்தமே தாக்குறும் நோய்நொடி போக்கி ,
மயக்கம் நீக்கி , அறிவொளி பாய்ச்சி
திருத்த முறும்வாழ் வினுக்கே நித்தம்
துதிக்கும் திருப்புகழ் ஏத்துக நன்றே !

முருகப் பெருமான் பிரணவம் பெற்று
முந்துறு முயிர்ப்பினில் அருணகிரி நாதர்
உருகி வுருகியே இறைமையி னூடே
ஒப்பிலாச் சந்தம் கொழிக்க ஆன்ற
திருப்புகழோடு திருவேல் விருத்தம்
செஞ்சொற் கந்தர லங்காரம் , சேவல்
விருத்தம் , திருநல் வகுப்பும் கொள்ளின் ,
விரைசெறி புகழுடன் நீடு வாழ்வரே!



அவனிக்கு அருளமுதம் வழங்கிய அருளாளர் ஸ்ரீ அருணகிரிநாதர் சுவாமிகள்

எழுத்து : சங்கபூஷண் - செந்தமிழ்ச் செல்வர் சித . இராமசாமி , PJK , PJM , - பினாங்கு

கந்தனின் கருணைக்கும் பாத்திரமான கவிவேந்தர் ; சொல் , எழுத்து , கருத்து இவை மூன்றும் பாவினத்திலே பரவிக்கிடக்க வேண்டும் .பாட்டிலே பக்தியும் , சக்தியும் விரவிக் கிடக்க வேண்டும் , சந்தமும் , ஓசை நயமும் , படிப்போரின் இதயத்தைக் காந்தம் போல இழுக்க வேண்டும் .

ஸ்ரீ அருணகிரிநாதரிடம் இத்தனையும் உண்டு , அத்தனையும் கற்கண்டு ; தெய்வீக சக்தி பதிவாகியிருக்கும் திருப்பாசுரங்களைப் படிப்போர் இறைவனுக்கு , வேண்டப்பட்டவர்களாக விளங்குவார்கள் !

‘ ஐயா, அருணகிரி அப்பா, உனைப்போல மெய்யாக
ஓர் சொல் விளம்பினர் யார் ? ’

(தாயுமானவர்)

பதினைந்தாம் நூற்றாண்டிலே அவதரித்த பாவலர்; கந்தனின் கருணைக்காகத் தவமிருந்த தமிழ்க் காவலர் ; விதிவசத்தால் வழிதவறி வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்டு, பல்வேறு துன்பங்கள் , தொல்லைகள் அலைக்கழிக்க , நோயிலே சிக்கி நொந்து போனார் ! கந்தனின் கருணையும் கை கூடவில்லையே என்ற ஏக்கம் – தொடர் கதையாகத் துரத்தும் துக்கம் – அணு அளவும் அரும்பவில்லை நம்பிக்கை ஊக்கம் .

உலகியல் வாழ்க்கையைத் துறந்தார் – சுற்றுச் சூழ்நிலையை மறந்தார் – உயிர் தேவையில்லை என உணர்ந்தார் – விரைந்தார் ஆலயக் கோபுர உச்சிக்கு , வீழ்ந்தார் தரையை நோக்கி. இனியும் பொறுப்பாரா இறைவன் ? பிறந்ததின் நோக்கத்தை அருணகிரியாருக்குப் புரியவைக்க வேண்டிய திருக்கிறதே ! தற்கொலை நோக்கத்தோடு விழுந்த அருணகிரியாரைத் , தாங்கிப் பிடித்தான் தணிகை வாசன் .

ஞானசிரியக் குருவாகத் தோன்றிய ஞானபண்டிதன் , தன் பக்தனை நோக்கி " சும்மா இரு " என்று ஞானஉபதேசம் செய்து அருளினார். பலகாலம் தவமிருந்த அருணகிரியாரின் ஆழமான அன்புக்கு இரங்கினான் ஆறுமுகன்! மயில் வாகனத்தோடு காட்சி தந்த முருகப் பெருமான் , அருணகிரிநாதரின் நாவிலே " ஓம் " என்ற பிரணவ மந்திரத்தை தன்கை வேலால் எழுதினான் , முத்து முத்தாகத் தமிழ் பாடு என்று முக்கண்ணன்மைந்தன் கருணைக் கட்டளைப் பிறப்பித்தான் . ஞானம் பெற்ற அருணகிரியார் , " முத்தைத்தரு " என்று தொடங்கும் பாடலோடு , திருப்புகழ்ப் பாசுரங்களை , வான்மழைபோல வற்றாது வழங்கினார் .

கந்தவேளின் கருணைப்பார்வை தொட்ந்தது ! காந்தம்போல , பக்தர்களின் மனம்கவர் திருப்பாடல்களைப் பாடினார் ! ஒரு மன்னனின் கண்பார்வைக்கு உதவிசெய்யும் பொருட்டு , கிளியாக உருமாறி , விண்ணுலகம் சென்று கண்மலரைக் கொண்டுவந்து , காவலனின் கண்பார்வைக்கு உயிர்கொடுத்தார் !

விதிவசத்தால் , அருணகிரியார் கிளியாகவே , முருகனிடம் அடைக்கலமானார் ! கிளியாகவே இருந்துகொண்டு , பாடிய தெய்வீகப் பாடல்கள்தான் , கந்தர் அனுபூதி திருவகுப்பு போன்ற இன்னிசைக் காவியங்கள் .

"முருகா என ஓர் தரமோ தடியார் முடிமேல் இணைதான் அருள்வோனே "

(திருப்புகழ்)

"முருகன் , குமரன் குகனென்று மொழிந்து உருகுஞ் செயல் தந்து உணர்வென்றருள்வாய் "

(கந்தரநுபூதி)

ஒருமுறை முருகாவென ஓதினால் போதும் – உடனே அவன் தன் திருவடியை நமது சிரசிலே வைத்து அருள்புரிவான். அப்படியானால் எல்லோரும் ஒருதரம் முருகாவெனச் சொல்லி , அவன் திருத்தாளின் அருளை எதிர்ப்பார்க்கலாமா ? இயலுமா ?

அருணகிரியார் தமது பாட்டின் இரண்டாவது வரியில் பதில் சொல்லுகிறார் ! உருகும் செயல் தந்து உணர்வு என்றருள்வாய் ! முருகா என்று ஓதும் போதே , மனம் உருகும் நிலை ஏற்படவேண்டும் ! ஓதும் போதே அந்த உணர்வு உச்சநிலைக்குச் செல்லும் என்றால் , எத்தனை ஆயிரம் தடவை , நமது மனம் அந்த மந்திரச் சொற்றொடரை பதிவு செய்திருக்கும் ! உதடுகள் ஒலி எழுப்பினால் மட்டும் போதாது – உள்உணர்வு , அந்த வேத ஒலிக்கு உரமாக அமைய வேண்டும் , அப்பொழுதுதான்.

"ஒருகால் நினைக்கின் இருகாலுந் தோன்றும் முருகா என் றோதுவார் முன் ".
என்ற பொருளுக்குப் பொருத்துமாக இருக்கும் ! சரணம் , சரணம் சரவணபவா என்று , அன்பாக , ஆர்வமாக , அமுத்தமாக ஓதி வரும் அன்பர்களுக்குக் குருவாக வந்து அருள்புரிவான்

"முருகன் குமரன் குகனென்று மொழிந் துருகும் செயல் தந்துணர்வென்று அருள்வாய்
பொருபுங்கவரும் புவியும் பரவும் குரு புங்கவ ! எண் குண பஞ்சரனே ! "

(கந்தரனுபூதி)

உலகோர் , உள்ளம் உருகி வணங்கிப் போற்றும் குருநாதனே ! எட்டுவித திருக்குணங்களைத் தன்னகத்தே கொண்டிலங்கும் வேலவனே , முருகா , குமரா , குகனே என்று உன் திருநாமம் உச்சரிக்கும் பக்தர்களுக்கு உன் அருள் அமுதத்தைப் பொழிந்துகொண்டே இரு !

நீ ஒரு கற்பகத்தரு ! வேண்டியவர்களுக்கு வேண்டியதைக் கொடுக்கும் வள்ளல் ! வேண்டத்தக்கது அறிவோய் நீ , வேண்ட முழுதும் தருவோய் நீ என்று உனது ஆற்றலை அருணகிரியாரைப் போன்றவரகள் ஆயிரமாயிரம் பாடல்களிலே சொல்லி இருக்கிறார்கள் .

" ஆடும் பரிவேல் அணிசேவல் எனப் பாடும் பணியே , பணியாய் அருள்வாய் "கந்தரநுபூதியிலே வரும் கற்கண்டு கவிவரிகள் . ஆடும் மயில் ஆறுமுகனின் வாகனம் ; அன்பர்களைக் காப்பதற்கு, அரணாக விளங்கும் வேல் ; தீயவனையும் , தூயவனாக்கி , அடைக்கலம் கொடுக்கும் இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் சேவல். முக்கண்ணன் மைந்தனுடைய மூன்று சிறப்பு அம்சங்களைப் பாடிப் பாடி அருட் சேவை செய்திடும் பணியை எனக்கருள்வாய் முருகாவென முறையிடுகிறார் அருணகிரியார் ! மூவர்க்கும் , தேவர்களுக்கும் முழுப்பொருளானான் முருகன் .

அத்தன் , அரி , அயன் , அம்பிகை , லெட்சுமி , வாணியுடனே, வரையுமாக் கலைகளும் தானே நானென்று சண்முகமாகத் தாரணியுள்ளோர் சகலரும் போற்ற

என்ற பாடல் வரிகள் , ஆறுமுகனுக்குள் அடக்கமாயிருக்கும் ஆறுசக்திகளையும் நமக்கு அறிமுகப்படுத்துகிறது .

சௌரம் (சூரிய சமயம்) , சைவம் (சைவ சமயம்), சாக்தம் (சக்தி சமயம்), வைணவம் (விஷ்ணு சமயம்), காணாபத்யம் (கணபதி சமயம்) , கௌமாரம் (குமார சமயம் – முருகனுக்குரியது) – இந்த அறுவகைப் பிரிவுக்கும் , உயர்தலைவனாக , உயர்ந்து நிற்பவன் முருகப் பெருமான் !

" அறுசமயச் சாத்திரப் பொருளோனே அறிவுளறிவார்க் குணக் கடலானே " என்ற கருத்தை அருணகிரியார் சித்தரிக்கிறார் .

நினைத்தார் சித்தத்துறைவோனே என்று சிவசுப்ரமண்யத்தைப் பாடிய அருணகிரியார் சண்முக தத்துவத்தை (அறுவகை தத்துவம்) திருப்புகழிலே விளக்கமாக விவரிக்கிறார் .

"ஐந்து பூதமும் ஆறு சமயமும் மந்திர வேத புராண கலைகளும்
ஐம்பதோர் விதமான லிபிகளும் – வெகுருப அண்டராதி
சராசரமும் உயர் புண்டரீகனும் மேக நிறவனும்

அந்திபோலுருவானும் நிலவோடு – வெயில்காயும் சந்திர சூரியர்
தானும் அஜபையும் விந்து நாதமும் ஏக வடிவமும் தன்
ஸ்வருபமாக உணர்வது – சிவயோகம் !

இத்தனைக்கும் மேலாக ஏக வடிவமாக நின்று நெஞ்சைத் தொடுகிறான் சண்முகம் !. பஞ்ச பூதங்களையும் , 36 தத்துவங்களையும் கடந்தோமானால் , கந்தனைக் காணலாம் ! எங்கே காணலாம் ! புருவ மத்தியில்தான் அருட்பெருஞ் சோதியாக , சண்முகனைக் காணலாம் !

நெற்றிக்கு நேரே புருவத் திடைவெளி
உற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்றாய் பரமன் இருந்திடும்
சிற்றம் பலமென்று சேர்ந்துகொண்டேனே

(திருமந்திரம்)

நமது உடலில் , மூலம் என்ற முதல் சக்தியிலிருந்து , நெற்றி நடுப்பகுதியில் ஒளிவிடும் "ஆக்ஞை" என்ற சக்திவரை , ஆறுசக்திகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன !

நமது எண்ணங்களை ஒரு முகப்படுத்தி தியான ஆற்றலின் மூலம் , மூலாதாரம் , சுவாதிஷ்டானம் மணிப்பூரகம் , அனாகதம் , விசுக்தி , ஆக்ஞை என்ற முறைப்படி , தியான சக்தியை நடுநெற்றியில் அழுத்தமாகப் பதிவு செய்ய வேண்டும் . அங்கேதான் சோதிவடிவில் சண்முகநாதனாக காட்சியளிக்கிறார் .

அருணகிரி சுவாமிகள் அந்த சோதியை உணர்ந்தவர் – நமக்கும் உணர்த்துகின்றவர் ! அவரது அருட்பாக்கள் , முருகனது பரப்பிரமம் சோதியை நாமும் காண்பதற்கு , அருள்விளக்காகப் பயன்படும் !

சரணம் ! சரணம் ! சண்முகா சரணம்



அருணகிரிநாதரின் முருக பக்தி

முனைவர் சேகர் நாராயணன்
விரிவுரையாளர், ஆசிரியர் கல்விக் கழகம்,
ஈப்போ வளாகம், பேராக்

அன்பாலும் கருணையாலும் அச்சத்தாலும் "முருகா" என்று அழைப்பது பக்தர்களுக்கு வழக்கம். அது ரத்தத்தில் ஊறிவிட்ட ஒரு பக்தி பண்பாடு. "வேண்டிய வரங்கொடுப்பான் மெய்கண்ட தெய்வம், இத்தெய்வ மல்லால் புவியில் வேறு இல்லை" என்று முருகப் பெருமானைக் குமரகுருபரர் பாடுகிறார். உண்மை. தனி வழிக்குத் துணை செங்கோடன் வடிவேலும் மயுரமும் தாமே!

முருகப் பெருமான் ஒரு தமிழ்க் கடவுள். தமிழ்மொழியை அகத்தியருக்கும் பிறருக்கும் அறிவுறுத்திய கடவுள் என்றும் ஓங்காரம் என்னும் பிரணவத்தின் பொருளைச் சிவபெருமானுக்குத் தமிழ்மொழியின் வாயிலாகவே முருகப் பெருமான் உபதேசித்தார்.

கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத் தெரிய
கொஞ்சித் தமிழால் பகர்வோனே
-அருணகிரிநாதர் -திருப்புகழ்

என்று முருகப் பெருமானைத் தமிழிலேயே அருணகிரிநாதர் புகழ்வதைப் பார்க்கும்போது மெய் சிலிர்க்கிறது.

முருகப் பெருமானை ஆறுமுக நாதர் என்றும், கந்தன் என்றும் சிறப்பாக அழைப்பதுண்டு. முருகப் பெருமானுக்கு ஆறு முகங்கள் என்றும் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சிறப்புண்டு என்றும் கவியரசு கண்ணதாசன்;

மங்கையரின் குங்குமத்தைக் காக்கும் முகம் ஒன்று
வாடுகின்ற ஏழைகளைத் தாங்குமுகம் ஒன்று
சஞ்சலத்தில் வந்தவரைத் தாங்கு முகம் ஒன்று
சாதி மதம் பேதமின்றி பார்க்கும்முகம் ஒன்று
நோய் நொடிகள் தீர்த்து வைக்கும் வண்ணமுகம் ஒன்று
நூறுமுகம் காட்டுதம்மா ஆறுமுகம் இன்று

என்று இவ்வாறு பாடுகின்றார்.

ஐந்து வயது, பத்து வயது வரை கனியையும், கரும்பையும் சுவைத்து இன்பம் காணுகிறோம். இருபது வயதில் பெண் இன்பத்தை நாடுகிறோம். முப்பது வயதில் பதவி இன்பத்தை நாடுகிறோம். பிறகு?

இந்த கேள்விக்குத் திருநாவுக்கரசர் விடை சொல்கின்றார். கனி, கரும்பு, பெண், பதவி எல்லாம் இன்பம்தான். ஆனால், இவை தற்காலிகமானவை. நிரந்தர இன்பம் திருவிடைமருதூர் பெருமானின் நினைப்பே என்கிறார்.

"கனியினும் கட்டிப்பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல்பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்
இனியந்தன் அடைந்தார்க்கு இடை மருது ஈசன்"

இப்படி மாறா இன்பம் தருகின்ற தோன்றாத் துணைவனாக நமக்கு அருள் தருகின்ற கலியுகத் தெய்வம் கந்தன். அவருக்கு மற்றொரு பெயர் கருணை.

முருகன் கருணை மறக்கருணை. கருணை இரண்டு வகைப்படும். ஒன்று அறக்கருணை; மற்றொன்று மறக்கருணை. அறக்கருணைச் செயல் கொடுமையானதாகவும் முடிவு இன்பம் தருவதாகவும் இருப்பது. இராமன், கண்ணன் ஆகிய கடவுளர் கருணை அறக்கருணை; கந்தன் கருணை மறக்கருணை. வேறு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால்,

இராமன், இராவணன் ஆணவத்தையும் கொன்றான். இராவணனையும் கொன்றான்.

கண்ணன், துரியோதனன் ஆணவத்தையும் கொன்றான். துரியோதனனையும் கொன்றான்.

கந்தன் சூரபத்மன் ஆணவத்தை மட்டுமே கொன்றான். சூரனை மயிலாக மாற்றித் தன்னை வணங்குவோர், அவனையும் வணங்குமாறு செய்துவிட்டானே!

அதனால்தான் இராமலிங்க அடிகளார் கந்த கோட்டத்து முருகனைப் பாடுகின்றபோது "ஈனமங்கே செய்த தாருகனை, ஆயிரம் இலக்கமுறு சிங்க முகனை, எண்ணரிய "திறல் பெற்ற சூரனை, மறக்கருணை ஈந்து பணி கொண்டாய்" என்று பாடுகின்றார்.

முருகன் மீது பற்றுக்கொண்டு ஞானோப தேசம் பெற்றவர் அருணகிரிநாதர். "திருப்புகழ் முழுவதும் முருகன் திருப்புகழே! "திருப்புகழ் படிப்பவர் உள்ளத்தினில் இருப்போம்" என்று முருகனே கூறுவதாகத் திருப்புகழுக்கு அமைந்த தனிப்பாடல் கூறுகிறது. அருணகிரியார், திருவண்ணாமலை வடக்குக் கோபுரத்திற்கு அருகில் உள்ள முருகன் கோயிலில் பல நாட்கள் தவங்கிடந்தவர்.

முருகப்பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் அனைத்துக்கும் சந்தப் பாமாலை பாடி நம்மை வாழ்வித்தவர்.

நான்கு திசைகளோடு மேல்கீழ் என்ற இரண்டு இடங்களிலும் வியாபித்திருப்பதால் பரம் பொருளை "ஆறுமுகம்" என்றும், 'ஆறுமுகமானப் பொருள்' என்றும் பௌராணிகர்கள் கற்பனை செய்திருக்கலாம். இந்த ஆறுமுகங்களின் செயல்கள் திருமுருகாற்றுப்படையிலும் வருணிக்கப்படுகின்றன. அருணகிரிநாதரும் ஆறுமுகங்கள் ஆறுவிதமாகத் தொழிற்பட்டு உலகங்களையெல்லாம் பரிபாலித்துக் கொண்டிருப்பதாக வருணித்திருக்கிறார்.

இப்படிப்பட்ட கருத்துக்களையெல்லாம் முருகசுப்பிரமணியனுக்குரிய ஆறுமுகங்களின் செயல்திறனாகப் பின்வரும் பாடலில் காணலாம்.

ஏறு மயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே;
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே;
கூறும்அடி யார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே;
குன்றுருவ வேல் வாங்கி நின்றமுகம் ஒன்றே;
மாறுபடு சூரனை வதைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்தமுகம் ஒன்றே!
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி யருணாசலம் அமர்ந்த பெருமானே!

இந்த பாட்டு எவ்வளவு உயர்ந்த செய்திகளை எவ்வளவு அழகாகப் புராண மொழியில் வெளியிடுகிறது.

ஒரு முகம் "மயிலேறி விளையாடு" விளையாட்டிலேயே திருப்தி அடைந்திருக்கும் குழந்தை போலிருக்கிறதாம். இந்த விளையாட்டின் பயன்தான் இந்த அழகான உலகம்.

இந்த விளையாட்டுத்தனத்திற்குள் புதைந்திருக்கிறது ஞானசக்தி, நீறு பூத்த நெருப்பைப்போல! இப்படிப்பட்ட ஞானம் மிளிர்கின்றது, இரண்டாவது முகத்திலே! இந்த முகம்தான் சிவபெருமானுடனும் ஞானம் பேசியதாம்.

இவ்வளவு ஞானப்பெருமையும் அடியார்கள் விஷயத்திலே கருணையாகக் கனிந்து அவர்களைத் தாங்கிக் காப்பாற்றுகிறது. ஞானமூர்த்தி கருணை மூர்த்தியாகக் காட்சி தருவது மூன்றாவது முகத்திலே! அந்த முகத்திலுள்ள கடைக்கண் பார்வையில் எவ்வளவு அன்பு, எவ்வளவு இரக்கம் ததும்புகிறது!

கருணை மட்டும் போதுமா? அடியார்களை இரட்சிப்பதற்குத் திறமை வேண்டுமல்லவா? உண்மையில், வீரமும் கருணையும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப்போல் ஒன்றுக்கொன்று இன்றியமையாதனவாகும். எனவே, வீராவேசத்தைப் பார்க்கின்றோம் நாலாவது முகத்திலே. புராண மொழியில், மலையையே உருவிப் போகும்படி வேல் வாங்கிய ஆவேசம் அந்த முகத்திலே குடிகொண்டு அடியார்களுக்கு ஏற்படகூடிய துன்பங்களைத் துவம்சம் செய்யக் காத்திருக்கின்றது.

இப்படி ஒரு மகாசக்தி ஆறுமுகமாகி அருள் செய்து கொண்டிருக்கிறது என்கிறார் அருணகிரிநாதர். உலகமெல்லாம் உண்ட மாயோனை "அறுபொருள்" என்று அன்பர்கள் பாடியதாக வருணிக்கிறார் இளங்கோவடிகள். அறுபொருள் என்றால் அற்றுத் தீர்ந்த பரம்பொருள். அறுபொருளை "ஆறுமுகமான பொருளாக"ப் பாடுகிறார் அருணகிரியார்.

நக்கீர தேவரைப் பின்பற்றியே ஆறாவது முகத்தின் செயலைக் கற்பிக்கிறார் அருணகிரிநாதர் என்பது பளிச்சென்று புலனாகி விடுகிறது. ஐந்தாம் முகத்தின் செயலாகவும் அருணகிரியார் கூறும் "குன்று உருவவேல் வாங்கு" வதையும், சூரனை வதைப்பதையும் நினைவூட்டுகிறது. இரண்டாம் திருமுகத்தின் செயலாக நக்கீரதேவர் கூறும் அன்பர் வரம். மூன்றாம் திருமுகத்தின் செயலாக அருணகிரியார் கூறும் "அடியார்கள் வினைதீர்" தலை நினைவூட்டுகிறது.

பன்மொழிகளைக் கற்று முக்கியமாக வடமொழியைக் கற்று வளமுறச் செய்து கொண்ட தம் தமிழ்ப் புலமையை முருகனருளால் அருட் புலமை யாக்கிக் கொண்டார் அருணகிரியார். எனவே, அவர் பாடல்களில் தமிழ் மணமும் வீசுகிறது; அருள் மணமும் வீசுகிறது.

அடிமை சொலும்சொல்
தமிழ்ப் பனீரொடு
பரிமளம் மிஞ்சக்
கடப்ப மாலையும்
அணிவோனே!

என்பது அருணகிரியார் வாக்கு.

இந்த அதிசய அனுபவத்தை நினைவூட்டிக் கொண்டு சிதம்பர சுவாமிகள், "அருணகிரிநாதரின் தமிழ் மணமும் குரலின் நன்மணமும் கமழ்தரு போரூர்க் குமரனே!" என்று பாடியிருக்கிறார். இத்தகைய அனுபவம் ஒன்று அந்தக்கவி வீரராகவருக்கும் கிடைத்தது எனலாம். இவரும் "திருப்புகழ் மலர்க்கே மணத்த மணமே" என்று பாடியிருக்கிறார். முருகன் புகழ் மலர்களை வாடாத தமிழ் மலர்களாகக் காட்டுகிறது திருப்புகழ் என்றால் மிகையில்லை. முருக மணக்கும் முத்தமிழ்க் கவிஞர் அருணகிரியார் என்று இன்றைய முருகு பக்தருலகமும் இப்பெரியாரைப் பாராட்டிய வண்ணமாயிருக்கிறது. மத பக்தர்கள் பக்தியை முன்னிட்டுப் போவதுபோல், தமிழறிஞர்களும், கவிஞர்களும், கலைஞர்களும் அருணகிரிநாதரின் பிறப்பிடமான திருவண்ணாமலைக்குப் போக வேண்டியது அவசியமாகும்.

அருணகிரியாரின் காலத்தை ஊகிப்பதற்கு ஆதாரம் தருவது போல் அருணகிரியாரின் புலமைத் திறனையும் பக்திப் பெருக்கையும் ஞான சொருபத்தையும் நாம் கண்டு மகிழ்வதற்கும் திருப்புகழ் தக்க ஆதாரங்கள் தருகின்றது. விருத்தப்பாக்களை முதல் முதலில் ஒரு புதிய முறையில் அபாரசக்தியுடன் கையாண்டு தமிழ்ப் பெருமக்களின் பேரிதிகாசத்தைப் படைத்துக் கொடுத்தவன் கம்பன் என்றால், "சந்தப்பாக்களால் ஆகிய திருப்புகழ்ப் பாவகையை முதலில் புதிய முறையில் அபார ஆற்றலுடன் கையாண்டவர் அருணகிரிநாதரே" என்று பலரும் கருதுவது தவறாகாது. நம் இலக்கிய வரலாற்றில் காலத்தின் பெருங்கோலமாக உருவாகியுள்ள இலக்கியங்களில் திருப்புகழையும் கம்பராமாயணத்தையும் சிறப்பாகச் சுட்டிக் காட்டலாம்.

இறைவனுடைய எங்குமுள்ள, என்றுமுள்ள சக்தியை உணர்ந்து கொள்வோருக்கு மரணம் என்பதே கிடையாது. அவர்கள் இவ்வுலகிலேயே அமரர் ஆகிறார்கள். மண்ணுலகிலேயே விண்ணுலக வாழ்வை அடைகிறார்கள். திருப்புகழிலே "மரணம் ஆற்றிய கருணை வார்த்தை" குறித்து செய்திகள் வருகிறது.

"மரணப்பிரமாதம் நமக்கில்லை" என்பது கந்தரலங்கார வாக்கு.

இவ்வளவு வலிமையும் தன் வலிமையல்ல, இறைவன் வலிமைதான் என்பதைப் பக்தர்கள் உணருகிறார்கள். அருணகிரிநாதர் இந்த உண்மையை நன்கு உணர்ந்திருக்கிறார். இந்த வலிமைதான் சிங்கார மாந்தரிடமிருந்து சிங்காரவேலனை நோக்கி இவர் முகத்தைத் திருப்பிவிட்டது. இந்த அருளை எப்படி மறப்பேன்? என்கிறார்.

"பாடி ஆடி நாள்தோறும் ஈடேறுமாறு ஞானம்" அருள வேண்டும் என்று பிரார்த்திக்கிறார். இந்தப் பிரார்த்தனைக்கு முருகன் இவரது வாழ்க்கையின் முற்பகுதிலேயே திருவண்ணாமலையில் அருள் புரிந்தான் என்று கருதலாம். இப்படி அருள் பெற்றதும் அன்பர் புகும் அமுதாலயத்தில் தமக்கும் ஒரு பதவியை ஆண்டவன் அருளியதாக நம்புகிறார். "அமுதாலயம்" என்றால் இறவாத நிலை வாய்க்கப் பெறும் பதம்தானே.

சாதாரண உறவுகளை விட்டு, துறவு பூணும் உண்மைத் துறவிகளுக்கு உலகமெல்லாம் உறவுதான். ஒரு குடும்பத்தைத் துறந்து உலகத்தையெல்லாம் ஒரு குடும்பமாகக் காண்பவர்கள் இவர்கள். இத்துறவிகள் பரம பக்தர்களாக இருந்தால் உலகமெலாம் ஒருயிராக நிற்கும் இறைவனையும் உறவாகக் கொண்டாடுவார்கள். அருணகிரியார் "நாயேனுக்கு உறவாகி நின்று" இறைவனை அருள் புரிந்ததாகக் கூறுகிறார்.

இறையருளை வியந்து பேசும் பக்தர்கள் அந்த அருளுக்கு முன் தங்கள் சாதனமோ தகுதியோ ஒன்றும் நிற்க முடியாது என்பதனை நன்குணர்ந்திருக்கிறார்கள். 'ஆண்டவன் நிலை என்ன? என் நிலை என்ன?' என்று அந்த உயரத்தையும் இந்தத் தாழ்வையும் சுட்டிக் காட்டுகிறார் அருணகிரியாரும். எனினும் எத்தகைய உறவு ஏற்படுகிறது கடவுளுக்கும் அடியவருக்கும்.

ஆண்டான் - அடிமை என்று அடியவர்கள் இந்த உறவைச் சொல்லிக்கொண்ட போதிலும், இறைவனோ 'நீயும் நானுமாம் ஏக போகமாய்' என்ற நிலையில் கலந்து உறவாடுகிறானாம். இவன் தொழிலை அவன் செய்யுமளவிற்கு உறவு ஏற்பட்டு விடுகிறது. இராமன் குகனுடைய படகோட்டும் தொழிலிலும் தனக்கு உரிமை உண்டென்று சொன்னானல்லவா? அருணகிரியாருக்குத் தொழிலோ கவிதைப் புனைதல். எனவே, 'உறவாகி நின்று கவிதையை புனைவோனே' என்று பாடுகிறார்.

பகவான் தனக்குள்ளே வந்து தன்னைத் தானே பாடிக் கொண்டான் என்பா நம்மாழ்வார். அருணகிரியாரும் அப்படிச் சொல்லுகிறாரா? தமக்கு உறவாகி நின்று தம் கவிதையை அவன் அணிந்து தன்னை அலங்கரித்துக் கொண்டதாக இவர் கூறுவதாகவே தோன்றுகிறது. 'பன்னிரு வாகுவில் தோளில், என் சொல்லே புனையும் சுடர் வேலவனே!' என்று கந்தரநுபூதியில் இவர் கூறியிருப்பதைக் காண முடிகிறது.

திருவண்ணாமலை என்ற சொந்த பிரதேசத்திலேயே அருணகிரியார் பிரசித்திபெற்றுத் திகழ்ந்த கதைதான் வில்லிபுத்தூரருடனும் சம்பந்தாண்டானுடன் இவர் வாதாடி வெற்றி பெற்றார் என்ற கதைகளாக வளர்ந்திருக்க வேண்டும். திருவண்ணாமலைப் பிரதேசத்தை அந்த நாளில் ஆண்டு கொண்டிருந்த பிரபுட தேவ மகாராஜன் இவரிடம் பிரேமையும் பக்தியும் உள்ளவன் என்பதில் ஐயமில்லை. ஆனால், வில்லிபுத்தூரருடனும் சம்பந்தாண்டானுடனும் இவர் வாது செய்தார் என்பது கற்பனைதான்.


'சந்தச் சபைதனில் எனதுளம் உருகவும் வருவாயே!' என்றும், 'மயிலும் ஆடி நீ ஆடி வரணும்' '....ப்ரபுடதேவ மகராஜன் உளமும் ஆட. வாழ்தேவர் பெருமானே!' என்றும் திருப்புகழில் வரும் குறிப்புகளிலிருந்தே சம்பந்தாண்டானுடன் இவர் வாது செய்த கதை தோன்றியிருக்க வேண்டும். இக்குறிப்புகளும் வில்லிபுத்தூரருடன் வாதம் செய்த கதைக்கு ஆதாரமாகக் கிடைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. 'அருணையில் ஒரு நொடிதனில் வருமயில் வீரா!' என்பது போன்ற வாக்கும் மேலே சொன்ன கதைக்கு ஆதாரமாகக் காட்டுவதுண்டு.

அருணகிரிநாதர் அருள்பெற்று புகழ்பெற்ற தலம் இவர் பிறந்த திருவண்ணாமலைதான் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த ஊரையே பழநிக்கும் திருசெந்தூருக்கும் அடுத்தப்படியாகத் திருப்புகழில் பாடியிருக்கிறார் இவர். இவரது வரலாற்றுக் குறிப்புகளைச் சிறப்பாகத் திருவண்ணாமலைத் திருப்புகழ்ப் பாடல்களில் காணலாம். திருவண்ணாமலைத் திருப்புகழே திருஞான சம்பந்தரை முருகனின் தோற்றமாக இவர் கருதுவதையும் தெளிவாகக் காண்கிறோம். சம்பந்தர் செயல்களை முருகன் திருவிளையாடல்களாகவே பார்க்கிறார், பாராட்டுகிறார் இவர்.

"திருந்தப் புவனங்கள் ஈன்ற பொன்
பாவை திருமுலைப் பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டில்
ஏறி, அறுவர் கொங்கை
விரும்பிக் கடல்அழக் குன்று அழக்
சூர்அழ விம்மிஅழங்
குருந்தைக் குறிஞ்சி கிழவன் என்று
ஓதும் குவலயமே"

-கந்தரலங்காரம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்



"பரம மாயையி னேர்மையை யாவரு
மறியொ ணாததை நீகுரு வாயிது
பகரு மாறுசெய் தாய்முதல் நாளுறு
பயனோதான்"



முருகனே கண்கண்ட கடவுள்!

அழ. சாத்தப்பன், ஈப்போ

கலியுகத் தெய்வம், கருணைக் கடவுள், கேட்டதை கேட்டபடியும் அதற்கு மேலாகவும் கொடுக்கூடிய இறைவனை, சிவபாலனை சிறப்பித்தும், போற்றியும் பாமாலை பாடி அருளிய அருணகிரிநாதருக்கு நான்காம் ஆண்டாக விழா எடுப்பதில் நிர்வாக உறுப்பினர் என்ற முறையில் மகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்வில் எனக்கு ஏற்பட்ட மாற்றம், முன்னேற்றம் அந்த முருகன் அருளால் கிடைத்தது என்று நம்புகின்றேன். அதே உங்களிடம் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரை கடலோடியும் திரவியம் தேடு என்ற மொழிக்கேற்ப மகன் வாழ்வில் முன்னேற்றம் வேண்டுமென உயர்ந்த சிந்தனையில் பெற்றோர் மலேசியா ஈப்போவிற்கு அனுப்பி வைத்தார்கள். எந்த உடமையும் அன்று சொல்லிக் கொள்ளும்படி இல்லை. பல சிரமங்கள், பேராட்டங்கள். அப்பவும் இளமை முதல் ஈப்போ தண்டாயுதபாணி முருகனை மனதால் நினைத்தும் உடலால் சேவை செய்து கொண்டும் வாழ்வு மலர வேண்டும் என்று நாள் தவறாமல் தொழுது வேண்டி வந்தேன். அருணகிரிநாதருக்கு தக்க நேரத்தில் அன்று அருளிய படி இன்று எனக்கு செல்வங்களையும் அந்த முருகன் தந்தது மட்டும் இல்லை; கேட்டதிற்கு மேலும் அருளியிருக்கிறான்.

முடிவில் அவன் அடி சேர வேண்டும் என்பது ஆசை. தேர்வை எழுதுவோம்; முடிவை முருகனிடமே விட்டு விடுவோம்.

ஓங்கி உயர்ந்தடிக்கும் ஒய்யாரக் கடலையும்
ஆங்கென அடிப்பணிந்து அமர்ந்திடுமாம் விந்தைபோல்
ஏங்கும் கவலையோடு என்முன்னே வந்திட்டால்
நீக்கும் தீங்கென்பான் நெஞ்சினுறை செந்தூரான்

ஆகையால் ஐயம் வேண்டாம். வையுங்கள் முருகன் மேல் நம்பிக்கை, வாழ்இல் வளம் பெறுங்கள் என்று கூறி இந்த சிற்றுரையை முடிக்கின்றேன்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் யாதொன்றும் அறியேன் பராபரமே.

சிவா சிற்றம்பலம்

தனிப்புகழ்

ஆக்கம் - கவிஞர் கண்ணதாசன்



செவ்விய தமிழினிற்
சிந்து பயின்றவன்
ஒவ்வொரு சொல்லையும்
உருக்கிப் படைத்தவன்
கவ்வி இழுத்திடும்
கவிதையில் வல்லவன்
எவ்விதம் அன்னவன்
ஏற்றம் இயம்புவேன்!

திருப்புகழ் நூலினிற்
தனிப்புகழ் கொண்டவன்
பரம்பொருள் தம்மையும்
பக்தியில் வென்றவன்
அறப்பொருள் சொல்வதில்
அன்னையின் மேலவன்
'இருப்பது பொய்'யென
அறிந்தே இருந்தவன்!

சொல்வளம் கொள்வதில்
தோன்றாத் துணையவன்
பல்வளம் பெருகிடும்
பாடல் வகுத்தவன்
நல்மனம் யாவையும்
நாடும் திறத்தவன்
வல்வினை வென்றவன்;
வாழ்ந்தும் பயின்றவன்!

அருணகிரி எனும்
அடியவன் திருப்பெயர்
உரைக்கும் மனங்களில்
உள்ளொளி பாயுமே!
இருளும் ஒளியென
ஏற்றம் படைக்குமே!
மருளும் மனங்களில்
மயக்கம் துடைக்குமே!

அன்னவன் பெருமையை
அறிந்த ஒருசிலர்
முன்னவன் பணிசெய
முனைந்து நின்றனர்
என்னிவர் பெற்றதோர்
இன்பப் பேறுகள்
பன்னெடும் நாளவர்
பக்தியில் வாழ்கவே!

(அருணகிரிநாதர் 600-வது பிறந்தநாள் விழா மலருக்கு எழுதப்பட்டது)
கவிஞர் கண்ணதாசன் கவிதைகள்
ஆறாது தொகுதி

கடந்தாண்டுகளின் நினைவலைகள் .....



2010 - ம் ஆண்டு
அருணகிரிநாதர் விழா





2011 - ம் ஆண்டு
அருணகிரிநாதர் விழா





2011 - ம் ஆண்டு
அருணகிரிநாதர் விழா





2012 - ம் ஆண்டு
அருணகிரிநாதர் விழா



2012 - ம் ஆண்டு
அருணகிரிநாதர் விழா











2012 - ம் ஆண்டு
அருணகிரிநாதர் விழா







எங்களின் நெஞ்சார்ந்த நன்றி மலர்கள்

- பொற்கிழிக் கவிஞர் பேராசிரியர் சொ. சொ. மீ. சுந்தரம், மதுரை, தமிழகம்
- பேராசிரியர் அனந்தராமன் - ராஜம் அனந்தராமன், சென்னை, தமிழகம்
- தமிழ்க்காவலர், நற்பணிச் செம்மல் டத்தோ லெ. தமிழ்ச்செல்வன்
- டத்தோ சு. வீரசிங்கம், பேரா மாநில முதல்வரின் சிறப்பு ஆலோசகர்
- மாண்புமிகு மு. குலசேகரன், ஈப்போ பாராட் நாடாளுமன்ற உறுப்பினர்
- அருள்மிகு தண்டாயுதபாணி கோவில் நிர்வாகத்தினர் (நகரத்தார் பெருமக்கள்)
- ஒலி-ஒளி மேடை அலங்காரத்திற்கு அன்பளிப்புச் செய்த
  திரு. திருமதி இளங்கோ - புனிதவதி குடும்பத்தினர்
- சிங்காரம் ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. சிங்காரம் - மதிய உணவு
- திரு. ஆனந்தன் - காலை உணவு
- டாக்டர் காளிதாசன் கோவிந்தன்
- வழக்கறிஞர் ம. மதியழகன், ஈப்போ
- சுங்கை சிப்புட் திரு. ஜவஹர் நித்தியானந்தன்
- திரு. கரு. வ. வள்ளியப்ப செட்டியார், ஈப்போ
- திரு. PL. லெட்சுமணன் - அழகம்மை லெட்சுமணன் (கோலாலம்பூர்)
- ரதி டிரேடிங் திரு. ந. ஜவஹர் - வேல் உபயம்
- திரு. சாத்தப்பன், ஈப்போ
- திரு. சுபேன் சிங்கம்
- நிருத்தியோதய நடனப்பள்ளி மாணவிகள்
- இசைக்கலைஞர்கள், வாய்ப்பாட்டுக் கலைஞர்கள்
- நிகழ்ச்சி நெறியாளர்கள் திருமதி பூமதி, செல்வி விக்னேஸ்வரி
- மலருக்கு கட்டுரை வழங்கிய எழுத்தாளப் பெருமக்கள்
- மலருக்கு விளம்பரம் வழங்கிய வணிகப்பெருமக்கள்
- தமிழ் நேசன், மக்கள் ஓசை, மலேசிய நண்பன், நம் நாடு, தினக்குரல்
  பத்திரிகை நிருபர்கள்
- **ASTRO** (அஸ்ட்ரோ) வானவில்
- நல்லரசன் அச்சகம், ஈப்போ
- **Kaumaram.Com.** வலைப்பதிவு / நிர்வாகிகள்

மற்றும் இவ்விழா சிறக்க அனைத்து
நிலைகளிலும் உதவி செய்த
அனைத்து நல்லுள்ளங்களுக்கும் இவ்வேளையில்
எங்களின் நெஞ்சார்ந்த நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

இவ்வண்ணம்
அருணகிரிநாதர் விழா 2013
ஏற்பாட்டுக்குழுவினர்

